Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 49

புதன்கிழமை
14 ஜனவரி 2026

மார்கழி 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50




6ஆம் தரத்துக்குரிய

# கல்வி மறுசீரமைப்பை பிற்போட அரசு முடிவு!

அமைச்சர் நளிந்த அறிவிப்பு

**கொழும்பு, ஜனவரி 14**

**6 ஆம் தரத்துக்குரிய கல்வி மறுசீரமைப்புப் பணிகளை 2027ஆம் ஆண்டுவரை பிற்போடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். தரம் ஒன்றுக்குரிய மறுசீரமைப்பு நடவடிக்கை திட்டமிட்ட அடிப்படையில் நடைபெறும் எனவும் அவர் கூறியுள்ளார்.** »15

## அமைச்சரவை மாற்றமா? பேச்சுக்கே இடமில்லை

நளிந்த திட்டவட்டம்

கொழும்பு, ஜன. 14
அமைச்சரவையில் மறுசீரமைப்பு இடம்பெறும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கல்வி மறுசீரமைப்புத் தொடர்பில் எழுந்த குற்றச்சாட்டுக்கள் காரணமாக, பிரதமர் ஹரிணி கல்வி அமைச்சர் பதவியில் »15

## அடுத்த போகத்திலிருந்து நெல் விலை அதிகரிப்பு!

விவசாய பிரதி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 14
அடுத்த போகத்தில் இருந்து நெல்லின் விலையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று விவசாயப் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் மேலும் »15

## டாவோஸ் மாநாடு பிரதமர் பயணம்!

கொழும்பு, ஜன. 14
உலகப் பொருளாதார மாநாடு எதிர்வரும் 19ஆம் திகதி சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெறவுள்ள நிலையில், இந்த மாநாட்டில் பிரதமர் ஹரிணி »15

பிரதமர் ஹரிணிக்கு எதிரான

## நம்பிக்கையில்லா பிரேரணை; விவாதிக்க அரசாங்கம் தயார்

திகதிகளையும் அறிவித்து அதிரடி



கொழும்பு, ஜன. 14
பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிரணி முன்வைக்கும் பட்சத்தில், அதை எதிர்வரும் 20ஆம் மற்றும் 21ஆம் திகதிகளில் விவாதத்துக்கு எடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள் »15

## வல்வைப் பட்டவிழா ஏற்பாடுகள் நிறைவு!

யாழ்ப்பாணம், ஜன. 14
உதயனின் ஊடக அனுசரணையில், வல்வை உதயசூரியன் கழகமும், வல்வை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள 'வினோத பட்டப் போட்டித் திருவிழா' நாளை நடைபெறவுள்ள நிலையில், அதற்கான ஏற்பாடு »15

யாழ். நகரில் உள்ள

## பிரபல நகைக்கடையில் ஏராளம் நகைகள் மாயம்



யாழ்ப்பாணம், ஜன. 14
யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல நகைக் கடையொன்றில் ஏராளமான நகைகள் காணாமற்போயுள்ள நிலையில், அது தொடர்பான விசாரணைகள் இடம்பெறுவுள்ளன.
அண்ணளவாக 200 பவுணுக்கும் மேற்பட்ட நகைகளே இவ்வாறு »15

## ஹெரோய்னுடன் இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 14
ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த இரண்டு இளைஞர்கள், யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாருக் »15

அத்துமீறி மீன்பிடி:

## 10 தமிழக மீனவர்கள் நெடுந்தீவில் கைது

யாழ்ப்பாணம், ஜன. 14
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், தமிழக மீனவர்கள் 10 பேர் நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அத்துமீறிய மீன்பிடியைக் »15

"முதல் கோணல் முற்றும் கோணலாத்தான் முடியப்போகுது கண்டியளோ"

## வடக்கின் முதலீட்டு மாநாடு ஜன. 21ஆம் திகதி ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜன. 14
வடக்கு மாகாண முதலீட்டு மாநாடு, யாழ்ப்பாணத்தில் உள்ள திருவள்ளுவர் கலாசார மையத்தில் ஜனவரி மாதம் 21 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.
முதலீட்டாளர்கள், தொழில்முனைவோர், பொருளாதாரக் கொள்கை வகுப்பாளர்கள், அபிவிருத்திக் கூட்டாளிகள் மற்றும் தமிழ்ப் புலம்பெயர் சமூகத் »15






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 13.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4315 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 32 40 41 49 |
| விசேட எழுத்து | W |

**ஹந்தஹஎண ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 13.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1382 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 10 49 55 60 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 13.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0341 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 4 2 2 7 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 13.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2421 |
| ஆங்கில எழுத்து | R |
| சுப்பர் இலக்கம் | 26 |
| வெற்றி இலக்கங்கள் | 11 15 21 73 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 13.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6073 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 0 1 8 9 7 4 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 13.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2103 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 19 45 46 78 |
| விசேட எழுத்து | Z |

**சுப தவசக்**

| | |
|---|---|
| திகதி | 13.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0189 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 10 24 26 |

# ஜனாதிபதி அநுரவின் வருகையால் மன்னாரில் பூசி மெழுகப்படும் வீதி

யாழ்ப்பாணம், ஜன.14

**பொதுமக்கள் நீண்டகாலமாகக் கோரிக்கை முன்வைத்தும் திருத்தப்படாதிருந்த மன்னார் தபாலகத்தில் இருந்து சௌத்பார் செல்லும் பிரதான வீதி, தற்போது ஜனாதிபதியின் பயணம் காரணமாகச் செப்பனிடப்படுகின்றது என்று தெரியவருகின்றது.**

மன்னார் பிரதான தபாலகத்தில் இருந்து சௌத்பார் ரயில் நிலையம் செல்லும் இந்த வீதி நீண்டகாலமாகக் குண்டும் குழியுமாகக் காணப்பட்டது. இந்த வீதியைச் சீரமைத்துத் தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்துவந்தபோதும், வீதியைச் சீரமைக்க உரிய திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். இந்தநிலையில் நாளை வியாழக்கிழமை மன்னாரில் காற்றாலை மின்கோபுரத் திறப்பு விழா மற்றும் காற்றாலை மின்கோபுரங்கள் அமைப்பதற்கு அடிக்கல் நடும் நிகழ்வு என்பவற்றில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கலந்துகொள்ளவுள்ளார்.

அதையடுத்து குறித்த வீதியில் உள்ள குழிகளை நிரப்பிச் செப்பனிடும் வேலைகள் தற்போது துரித கதியில் மேற்கொள்ளப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

(எ-56)



**சுபிரி தன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 13.01.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0781 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கம் | 9 5 9 5 7 3 |

**Super Ball DLB**

| | |
|---|---|
| திகதி | 13.01.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3047 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கம் | 26 28 66 67 |

**சனிதா DLB**

| | |
|---|---|
| திகதி | 13.01.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கம் | 11 13 20 24 |
| வெற்றி வாரம் | 5208 |

**SASIRI DLB**

| | |
|---|---|
| திகதி | 13.01.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0877 |
| வெற்றி இலக்கம் | 03 26 40 |

**லக்ன ராசி DLB**


| | |
|---|---|
| திகதி | 13.01.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| துலாம் | |
| வெற்றி இலக்கம் | 05 06 18 30 |
| சீட்டிழுப்பு வாரம் | 4759 |

**KAPRUKA DLB**

| | |
|---|---|
| திகதி | 13.01.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | A |
| சுப்பர் இலக்கம் | 29 |
| வெற்றி இலக்கம் | 52 53 55 62 |
| வெற்றி வாரம் | 2223 |

**அத கோடிபதி DLB**

| | |
|---|---|
| திகதி | 13.01.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கம் | 13 25 37 66 |
| வெற்றி வாரம் | 2873 |



## விடைபெறுவதற்கு முன்பு கடலுக்குச் சென்ற ஜூலி

கொழும்பு, ஜன.14

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகப் பணியாற்றிய ஜூலி சங் தனது பதவிக்காலம் முடிந்து நாடு திரும்பியுள்ளார்.

அவர் வெளியேறுவதற்கு முன்னதாக, நாட்டின் தெற்குக் கடற்கரையில் தான் பெற்ற மறக்கமுடியாத ஒரு அனுபவத்தைத் தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ளார்.

"நான் பிறப்பால் ஒரு கலிபோர்னியப் பெண் என்றாலும், இதற்குமுன் ஒருபோதும் நீர்ச் சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டதில்லை.

இலங்கையில் எனக்குக் கிடைத்த ஒரு பொறுமையான பயிற்சியாளரின் உதவியால், பயத்தை வென்று நீர்ச்சறுக்குப் பலகையில் ஏறி சாதனை படைத்துள்ளேன்" என்று நெகிழ்ச்சியுடன் பதிவிட்டுள்ளார்.

இலங்கையின் தெற்குக் கடற்கரை நீர்ச் சறுக்கு விளையாட்டுக்கு மிகச் சிறந்தது என்றும், எதிர்காலத்தில் ஒரு சாதாரண சுற்றுலாப் பயணியாக மீண்டும் வந்து தனது பயிற்சியைத் தொடர விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

## ரணிலுக்குப் பரிசோதனை செய்த 5 மருத்துவர்களிடம் விசாரணை

கொழும்பு, ஜன.14

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உடல்நிலை குறித்து வழங்கப்பட்ட மருத்துவச் சான்றிதழ்கள் தொடர்பாக கொழும்பு தேசிய மருத்துவமனையின் ஐந்து மருத்துவர்களிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் வாக்குமூலங்களைப் பதிவுசெய்துள்ளது. நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் அடிப்படையில் இந்த விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க கடுமையான உடல்நிலை பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாகவும், அதன் காரணமாக அவருக்குப் பிணை வழங்கப்படவேண்டும் என்றும் ஏற்கனவே நீதிமன்றத்தில் முறையிடப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்தே அவர் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த ரணில் விக்கிரமசிங்க, அங்கிருந்து திடீரென அவசரமாக வெளியேறியமை பெரும் விவாதத்தையும் சந்தேகத்தையும் கிளப்பியது. இதன் காரணமாகவே, அவருக்கு வழங்கப்பட்ட மருத்துவச் சான்றிதழ்கள் மற்றும் அவரது உண்மையான உடல்நிலை குறித்து தற்போது குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (ச-இ)

## கிழக்கு மருத்துவமனைகள் வேலைநிறுத்தப் போராட்டம்

கொழும்பு,ஜன.14

கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் நேற்றுச் செவ்வாய்க்கிழமை வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் காரணமாக, அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனையின் மருத்துவக் கண்காணிப்பாளரைப் பதவியிலிருந்து நீக்கி, அந்தப் பதவிக்கு வேறொருவரை நியமிக்கக்கோரி இந்த வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## சஜித்துக்கு வாழ்த்துத் தெரிவித்து நெருக்கத்தைக் காட்டிய ரணில்!

கொழும்பு, ஜன.14

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தொலைபேசி ஊடாக பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். சஜித்தின் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற மதவழிபாட்டு நிகழ்வுக்குத் தமது பிரதிநிதிகளையும் அவர் அனுப்பியுள்ளார்.


எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் 59ஆவது பிறந்தநாள் நேற்றாகும். அதை முன்னிட்டு கங்காராம விகாரையில் விசேட வழிபாடு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கட்சி யின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன, சிரேஷ்ட உப தலைவர் சாகல ரத்நாயக்க , ரவி கருணாநாயக்க ஆகியோர் பங்கேற்று வாழ்த்துக் கூறினர். தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர் பழனி திகாம்பரம் ஆகியோரும் பங்கேற்றனர். ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பவற்றை ஒன்றிணைப்பதற்குரிய பேச்சுவார்த்தை வெற்றியை நோக்கிப் பயணிப்பதை இந்த நிகழ்வு உறுதிப்படுத்தியுள்ளது. சஜித்தின் பிறந்தநாள் நிகழ்வில் ஐ.தே.க. பிரதிநிதிகள் பங்கேற்றமை இரு தரப்பு இணைவுக்கான இறுதியான - உறுதியான சமிக்ஞையெனத் தெரியவருகின்றது. (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் களைகட்டும் 'ரெடி–மெட்' பொங்கல் விற்பனை

**யாழ்ப்பாணம், ஜன.14**
**வீட்டில் பொங்கலிடத் தேவையான அனைத்துப் பொருள்களையும் தேடி அலைந்த காலம் மலையேறி இப்போது ஒரே இடத்தில் பொங்கலுக்கான அனைத்துப் பொருள்களும் கிடைக்கும் வகையிலான 'ரெடிமெட்' பொங்கல் விற்பனை யாழ். நகரில் களைகட்டியுள்ளது.**



நவீன காலத்தின் பரபரப்புக்கு ஏற்ப பொங்கலுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களும் ஒரே இடத்தில் கிடைக்கும் 'ரெடிமெட்' விற்பனை நிலையங்கள் இம்முறை யாழ்.நகரில் அதிகளவில் முளைத்துள்ளன.
திருநெல்வேலிச் சந்தை, யாழ். பிரதான வீதிகள் மற்றும் சந்தை வளாகங்கள் எங்கும் மக்களுக்காக விதவிதமான அளவுகளில் மண்பானைகள் மற்றும் அடுப்புக்கற்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. அவற்றுடன் பொங்கலுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களும் ஒன்றாக விற்பனை செய்யப்படுகின்றன. கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் மழையையும் பொருட்படுத்தாமல் மக்கள் கூட்டம் தங்களுக்குத் தேவையான 'பொங்கல் செட்'களை ஆர்வத்துடன் வாங்கிச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது. (ச-17)

## உச்சந்தொடும் மரக்கறி விலை

கொழும்பு, ஜன.14
நாட்டில் தற்போது மழையுடனான வானிலை காரணமாக, விளைநிலங்கள் சேதமடைந்துள்ளதால் மரக்கறி விலைகள் எதிர்பாராதளவுக்கு உயர்ந்துள்ளதாக நுகர்வோர் கவலை வெளியிட்டுள்ளனர்.
தம்புள்ள மற்றும் கெப்பெட்டிபொலவில் 450 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட தக்காளி ஒரு கிலோகிராம், நுவரெலியாவில் 750 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. பச்சை மிளகாய் ஒரு கிலோ 650 ரூபா முதல் 900 ரூபா வரைக்கும், தம்புள்ளயில், 700 ரூபா முதல் 800 ரூபா வரைக்கும் விற்பனை செய்யப்படுகின்றது.
அத்துடன் ஏனைய மரக்கறிகளின் விலைகளும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## மாகாணசபைத் தேர்தல் நடந்தால் ஐ.ம.ச.– ஐ.தே.க. பொதுப்பட்டியல்

### அஜித் பி பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, ஜன.14
மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பன பொதுப்பட்டியலின்கீழ் போட்டியிடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன ஒன்றிணைந்து செயற்படுவதற்குரிய பேச்சு வெற்றியை நோக்கி நகர்ந்துள்ளது. உரிய நேரத்தில் இணைவு நடக்கும். கிராமியமட்டத்தில் இரு கட்சிகளின் ஆதரவாளர்களும் இணைந்தே பயணிக்கின்றனர். எனவே, அவர்களின் முடிவுக்குத் தலைமைகள் நிச்சயம் கட்டுப்பட்டாகவேண்டும். மாகாண சபைத் தேர்தலில் பொதுப் பட்டியலின்கீழ் களமிறங்குவோம். தேர்தலை நடத்தவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். சின்னம், கூட்டணி வியூகம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை-என்றார். (எ-44)

## தைத்திருநாள் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜன.14
மானிப்பாய் ஞானவைரவர் சனசமூக நிலையமும் கட்டுடை இளைஞர்களும் இணைந்து நடத்தும் பொங்கல் விழாவும் பரிசளிப்பு விழாவும் மைதானத்தில் நாளை வியாழக்கிழமை மாலை 5மணிக்கு நடைபெறவுள்ளது.
நிகழ்வின் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், சிறப்பு விருந்தினராக மானிப்பாயிலுள்ள அலுவலகத் தலைமை ஆய்வாளர் எம்.ஆர்.எம்.எஸ். கிருசாந்தா, கௌரவ விருந்தினர்களாக குடும்பநல உத்தியோகத்தரான ச.கமலராணி, பண்டத்தரிப்பு மகளிர் பாடசாலை அலுவலக ஓய்வுபெற்ற உதவியாளரான ஆ.கந்தசாமி, யாழ். போதனா மருத்துவமனையின் ஓய்வுபெற்ற சிற்றூழியரான வேலன் கதிரமலை, நிலைய முன்னாள் உறுப்பினரும் தற்போதைய உறுப்பினருமான நாகமுத்து சிவராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-4)

## வட்டு இந்துவுக்கு புதிய அதிபர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜன.14
யாழ். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் புதிய அதிபராகச் சிவஞானபோதம் தனஞ்சயன் நேற்றுச் செவ்வாய்க்கிழமை தனது கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.
இவர் இப்பாடசாலையின் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் கடமையாற்றிப் பாடசாலையின் வளர்ச்சியில் ஏற்கனவே பங்காற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-66)




## பட்டம் பற...பற...!

'ஈயடிச்சான் கொப்பி' எண்டு எங்கடையாக்கள் அடிக்கடி சொல்லக்கேட்டிருப்பியள். பள்ளிக்கூட மொண்டில சோதினை நடந்திருக்குது. அப்ப முன் மேசையில இருக்கிறவர் எழுதிற விடையளைப் பின்வாங்கில இருக்கிறவர் எட்டிப்பார்த்துக் கொப்பியடிச்சு எழுதியிருக்கிறார். அப்ப முன் மேசையில விடை எழுதிக்கொண்டிருந்தவரின்ர விடைத்தாளில ஒரு ஈ வந்து இருந்திருக்கு. அவரைக் கொப்பியடிச்சு விடை எழுதிக்கொண்டிருந்தவர், அதைமாதிரித் தானும் தன்ர விடைத்தாளில ஈயைக் கீறி விட்டிருக்கிறார். அதுக்குப் பிறகுதான் அவர் கொப்பியடிச்சு விடை எழுதின விசயம் வெளியில வந்து. ஒராள் செய்யிறதை இன்னொரு நாள் அப்பிடியே செய்யிறதை 'ஈயடிச்சான் கொப்பி'எண்டு சொல்லுறவை. பள்ளிக்கூடச் சோதினையில தொடங்கின உந்த ஈயடிச்சான் கொப்பி விளையாட்டு இப்ப பட்டத்தில பறக்கிறது வரை பரவிட்டுது.

நாலைஞ்சு வருசத்துக்கு முதல் வடமராட்சியில பட்டம் விட்டுக்கொண்டிருக்கேக்க, ஒருத்தர் திடீரெண்டு பட்டக் கயித்தோட பறக்கத் தொடங்கிட்டார். ஆளை விட பட்டத்தின்ர இழுவை பலமா இருந்ததுதான், இப்பிடிக் கயித்தைப் பிடிச்சுக்கொண்டு நிண்டவர் பறக்கிறதுக்குக் காரணம். கொஞ்சநேரம் கயித்தில பறந்து, கத்திக்குளறி ஒருமாதிரி ஆள்கீழ குதிச்சுத் தப்பிட்டார். இப்பிடி அவர் பட்டத்தில பறந்ததை அங்க நிண்ட ஒருத்தர் போனில வீடியோ எடுத்துப்போட, அந்த வீடியோ கடும் பேமஸாகி, பட்டத்தில பறந்த வரை இந்தியாவில இருக்கிற ரீவிச்சனல் எல்லாம் வந்து பேட்டி எடுக்கிற அளவுக்கு வந்திட்டுது. இப்பிடி ஒருத்தர் எதிர்பாராத விதமாப் பட்டத்தோட பறந்து பேமஸானதால, தாங்களும் அப்பிடிச் செய்தால் பேமஸாகலாம் எண்டு சிலர் நினைச்சிருக்கினம். அந்த நினைப்பால, அதுக்குப் பிறகு ஒவ்வொரு வருசமும் ஆரும் ஒருத்தர் பட்டக் கொடியோட பறந்தார் எண்டு வீடியோ வாறது வழக்கமாப் போட்டுது.


இந்த வருசம் நாலைஞ்சுபேர் அப்பிடிப் பட்டத்தோட பறக்கிற வீடியோக்கள் பேஸ்புக்கிலையும், ரிக்ரொக்கிலையும், இன்ஸ்டாகிராமிலையும் போட்டவை. ஒராள் பறக்கிறதைப் பார்த்திட்டு இன்னும் நாலைஞ்சு பேர் அப்பிடித் தாங்களும் பட்டத்தோட பறந்து வீடியோ போடுற வியாதி பரவத் தொடங்கிட்டுது. அந்த வீடியோக்களையும், அதுக்குப் பின்னணியாப் போடுப்பட்ட பாட்டுகளையும் பாக்கேக்கையே பிளான் பண்ணித்தான் அவையள் பட்டத்தோட பறக்கினம் எண்டது வடிவா விளங்கினது. அதிலையும் ஒரு வீடியோவில பள்ளிக்கூடப் பெடியள் யூனிபோர்மோட பறக்கினம். அவையளுக்கு இதுகள் பேமஸாகிற விளையாட்டாக் கிடக்குது. ஆனால் இவையளின்ர கெட்டகாலத்துக்கு பட்டம் நல்லா உயரத்தூக்கிட்டுது எண்டால் உயிரும் போகக் கூடும். காத்து எப்பிடி அடிக்கும், பட்டத்தின்ர இழுவை எப்ப கூடும், குறையும் எண்டெல்லாம் ஆராலையும் சொல்லேலாது. காத்தின்ர வேகம் கூடினால், இவையள் வீடியோவுக்காக விளையாட்டாப் பறக்க வெளிக் கிட்டு பரலோகம் போகிற வினையா முடிஞ்சுபோடும். அதால இப்பிடி வேணுமெண்டே பட்டத்தோட பறக்கிறவையை உரியவை பிடிச்சு, முறையாக் கவனிக்கிறதுதான் பட்டத்தோட பறக்கிற வியாதிக்கு நல்ல கைவைத்தியம் கண்டியளோ.

padsi@uthayan.com – பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆங்கிலப் புத்தாண்டு ராசிபலன்



## மீனம்

**அரண்மனையில் காவலனாக இருப்பதைக் காட்டிலும், குப்பத்தில் தலைவனாக இருப்பதே மேல் என சுய கௌரவம் உடையவர்கள் நீங்கள்தான்.**

உங்கள் ராசிக்கு 3ஆவது ராசியில் சந்திரன் நிற்கும்போது இந்த ஆங்கிலப் புத்தாண்டு பிறந்ததால் மனதில் உற்சாகம் பொங்கும். புது முடிவுகளை எடுத்து சுற்றியிருப்பவர்களை ஆச்சரியப்படுத்துவீர்கள். உடல் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும். உங்களின் தோற்றப் பொலிவு கூடும்.

குடும்பத்தில் உங்களை அலட்சியமாகப் பார்த்த நிலை மாறும். சந்தோஷம் அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் இருந்த கருத்துவேறுபாடு நீங்கும். பிள்ளைகளால் உறவினர்கள் மத்தியில் மதிப்புக் கூடும். மகளுக்கு வயதாகிக்கொண்டு போகிறதே என்று கவலைப்பட்ட நிலை மாறும். நல்ல இடத்தில் வரன் அமைந்து சொந்தபந்தங்கள் மெச்சும்படி திருமணத்தை முடிப்பீர்கள். குழந்தை இல்லாத தம்பதிக்கு வாரிசு உருவாகும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். இளைய சகோதரர்கள் உதவுவார்கள்.

1.1.2026 முதல் 31.5.2026 வரை குருபகவான் ராசிக்கு 4ஆம் வீட்டில் நிற்பதால் கணவன்- மனைவிக்குள் விட்டுக்கொடுத்துப் போகவும். முக்கியமான பிரமுகர்கள் அறிமுகமாவார்கள். அம்மாவின் ஆரோக்கியம் பாதிக்கும். 1.6.2026 முதல் 14.10.2026 வரை குருபகவான் ராசிக்கு 5ஆம் வீட்டுக்குச் செல்வதால் பூர்வீகச்சொத்து கைக்கு வரும்.

14.10.2026 முதல் 31.12.2026 வரை குருபகவான் ராசிக்கு 6ஆம் வீட்டுக்குச் செல்வதால் சிலர் வீடு மாறுவீர்கள். வாகனப் பழுது நீங்கும். நீண்ட நாளாக இழுபறியாக இருந்த சொத்து வழக்குகள் முடிவுக்கு வரும். உடன் பிறந்தவர்களின் ஆதரவுடன் பூர்வீக வீடு, மனை, விவசாய நிலம் ஆகியவற்றை நல்ல விலைக்கு விற்பீர்கள்.

வெகுநாள்களாக நினைத்துக் கொண்டிருந்த அனைத்தும் நிறைவேறும். புதிய கார் வாங்குவீர்கள். சொந்த ஊரில் மதிப்புக்கூடும். அண்டை அயலாரிடம் அன்பாக நடந்துகொள்வீர்கள். அவர்களின் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்திக் கொடுப்பீர்கள்.

டிச.4 ஆம் திகதி வரை கேது 6ஆம் வீட்டில் நிற்பதால் குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். தந்தையாருக்கு உடல்நிலை பாதிக்கும். ராகு 12ஆம் வீட்டில் நிற்பதால் வீண்செலவுகளைக் கட்டுப்படுத்துங்கள். வருங்காலத்தைப் பற்றிய கவலைகள் தோன்றும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

டிச. 5ஆம் திகதி முதல் கேது 5ஆம் வீட்டுக்கு வருவதால் பிள்ளைகளின் நட்பு வட்டத்தைக் கண்காணியுங்கள். பூர்வீகச் சொத்து விஷயமாக அலைய வேண்டாம். ராகு உங்கள் ராசிக்கு இலாப வீட்டுக்கு வருவதால் ஷேர் மூலம் பணம் வரும். கொடுத்து ஏமாந்துபோன தொகையில் ஒரு பகுதி கிடைக்கும். கடனில் ஒரு பகுதியை பைசல் தீர்ப்பீர்கள்.

திருமணம் கைகூடி வரும். மகனுக்கு வெளிநாடு, வெளிமாநிலங்களில் படிக்கும் வாய்ப்பு அமையும். இல்லத்தரசிகளுக்கு மனக்குழப்பங்கள் நீங்கி த் தெளிவு பிறக்கும். குடும்பத்தினர் அனைவரும் உங்களிடம் ஆலோசனை கேட்பார்கள். கன்னிப் பெண்களுக்கு கல்லூரிப் படிப்பில் இருந்து வந்த தடைகள் உடைபடும். எதிர்பார்த்தபடியே நல்ல வாழ்க்கைத் துணை அமையும். அடுத்தவர் விஷயத்திலும் தலையிடாமல் இருப்பது நல்லது. நீங்கள் ஒன்று கேட்கப்போய், அது வேறு விதமாக புரிந்துகொள்ளப்படும். அதனால் பேச்சில் கவனம் இருக்கட்டும். கணினித்துறையினருக்கு சாதகமான காலம் இது. வெளிநாட்டு வாய்ப்புக் கிடைக்கும். இருக்கும் வேலையிலேயே முன்னேற் றம் இருக்கும். கவலை வேண்டாம்.மொத்தத்தில் இந்த ஆங்கிலப் புத்தாண்டு, எதிலும் நிதானத்தைத் தருவதுடன், இலக்கை எட்டிப்பிடிக்க வைப்பதாக அமையும்.

**பரிகாரம் : அம்மன் கோயிலில் வியாழக்கிழமையில் பூமாலை அணிவித்து வணங்குங்கள். தடைகள் விலகிச் சாதிப்பீர்கள்.**

### தைப்பொங்கலை முன்னிட்டு

## ஆடியபாதம் வீதியில் இன்று ஒருவழிப் போக்குவரத்து!

யாழ்ப்பாணம்,ஜன.14

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இன்று புதன்கிழமை நல்லூர் உப அலுவலகத்துக்குட்பட்ட ஆடியபாதம் வீதியில் இராமசாமிப் பரியாரியார் சந்தியிலிருந்து திருநெல்வேலிச் சந்தி நோக்கி கனரக வாகனங்கள் மட்டும் உள்நுழைவதற்குத் தடைசெய்யப்பட்டு குறித்த வீதி ஒரு வழி வீதிப்போக்குவரத்தாக மாற்றப்படுகின்றது என்று நல்லூர்ப் பிரதேசசபையின் தவிசாளர் பத்மநாதன் மயூரன் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலிச் சந்தைப்பகுதிகளில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் நோக்குடன் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இராமசாமிப் பரியாரியார் சந்தியிலிருந்து கனரக வாகனங்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் திருநெல்வேலிச் சந்தி நோக்கிப் பயணிக்கலாம்.

குறித்த நடைமுறை இன்று மட்டுமே நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ச-66)

## திருமறைக்கலாமன்றத்தில் இரு நாள்கள் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன.14

திருமறைக்கலாமன்றம் நடத்தும் பொங்கல் விழா இம்முறை காலை, மாலை நிகழ்வுகளுடன் இரண்டு நாள்கள் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. நாளை வியாழக்கிழமை காலை 5.30 மணிக்கு, இல.238,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்றத்தின் பணியகத்தில் பொங்கல் வைபவம் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து காலை 7 மணிக்கு இல.17, மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைஞானசுரபி தியான இல்லத்தில் பண்பாட்டு வழிபாடு இடம்பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூதுக் கலையகத்தில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா மருத்துவமனையின் பொது மருத்துவ நிபுணர் மருத்துவக் கலாநிதி சிவபாலன் சிவன்சுதன் கலந்துகொள்வார். நடனம்,கவிதை அளிக்கை,மரபுவழி நாடகப் பாடல்கள்,வேட ஜாலம் நவீன நாடகம் உள்ளிட்ட கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (க)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தைவழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு வீட்டில் மராமத்துப் பணியின் காரணமாக உடல் அசதி உண்டாகும்.

**இடபம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். மாலையில் உறவினர்களுடன் தொடர்புகொண்டு பேசி நலம் விசாரிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**மிதுனம்:** திடீர்ச்செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**கடகம்:** மனதில் இனந்தெரியாத சோர்வு ஆட்கொள்ளும். வாழ்க்கைத்துணையால் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும்.

**சிம்மம்:** தாய்வழி உறவில் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத் துணையின் ஒத்துழைப்புக் கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் வீண்பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளை அல்லது பெண்ணின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**விருச்சிகம்:** மகிழ்ச்சியான நாள். சிலருக்கு வாழ்க்கைத்துணையுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். ஆனாலும் செலவுகள் அதிகரிப்பதால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

**மகரம்:** முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாக முடியும். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள்.

**மீனம்:** இன்று எதிலும் பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை





## புதிய வழிகளைக் கண்டறிக!

உலக அரசியல் அரங்கில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முன்னெடுக்கும் ஒவ்வொரு நகர்வும், புவிசார் அரசியலைக் கடந்து சாமானிய நாடுகளின் சமையலறை வரை அதிர்வுகளை ஏற்படுத்தவல்லது. தற்போது வெனிசுலா மீதான அமெரிக்காவின் கடும்பிடி மற்றும் ஈரானில் வெடித்துள்ள எதிர்ப்புப் போராட்டங்களுக்கு ட்ரம்ப் அளிக்கும் ஆதரவு என்பனவும் அவ்வாறானவைதான். இப்போது, பூகோள அரசியலுக்கு அப்பால், இலங்கையைப் போன்ற சிறிய, பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டுவரும் நாடுகளை நேரடியாக அச்சுறுத்துவது ஈரானுடன் வணிக உறவுகளைக் கொண்டிருக்கும் நாடுகளுக்கு 25 வீத வரி விதிக்கப்படும் என்ற ஒற்றை அறிவிப்புத்தான்.

வணிகத்தொடர்பு தொடர்பான எவ்வித விளக்கமும் இன்றி இந்த வரிவிதிப்பு உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் என்ற ட்ரம்பின் அறிவிப்பு உண்மையாகச் செயற்படுத்தப்படுமாயின், இலங்கையைப் பொறுத்தவரை, நாட்டின் பொருளாதார சுவாசக் குழாயின் மீது வைக்கப்படும் கத்தி என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால், இலங்கையின் தேயிலைக்கு ஈரான் ஒரு மிக முக்கியமான சந்தையாகும். நாட்டின் பொருளாதார வீழ்ச்சியால் - ஈரானிடமிருந்து பெற்ற எரிபொருளுக்கான கடனைத் தீர்க்க, பணத்துக்குப் பதிலாகத் தேயிலையை அனுப்பும் 'பண்டமாற்று' முறையை இலங்கை செயற்படுத்துகின்றது. பொருளாதார நெருக்கடியில் சிக்குண்ட இலங்கைக்கு இது ஒரு பெரும் ஆசுவாசமாக இருந்தது. ட்ரம்ப்பின் 25 வீத வரிவிதிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டால், ஈரானுடனான இலங்கையின் வர்த்தகம் 'கறுப்புப் பட்டியலில்' சேர்க்கப்படலாம் அல்லது அதிக வரிச்சுமையால் ஈரானுக்கான தேயிலை ஏற்றுமதி இலாபமற்றதாக மாறலாம். இது தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் முதல் ஏற்றுமதியாளர்கள் வரை பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவிடக்கூடும். மறுபுறத்தில் வெனிசுலா, ஈரான் ஆகியன உலகின் முக்கியமான எண்ணெய் உற்பத்தி நாடுகள். இந்த நாடுகள் மீதான அமெரிக்காவின் அழுத்தமும், மத்திய கிழக்கில் நிலவும் பதற்றமும் சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெய் விலையை அதிகரிக்கச் செய்யும். டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி இன்னும் ஸ்திரமடையாத நிலையில், எண்ணெய் விலை உயர்வு இலங்கையின் எரிபொருள் விலையில் எதிரொலிக்கும். இது மீண்டும் போக்குவரத்துச் செலவு, உணவுப்பொருள்களின் விலை உயர்வு மற்றும் பணவீக்கத்துக்கு வித்திடும் அபாயமும் இருக்கின்றது.

இலங்கை தற்போது ஒரு மெல்லிய கயிற்றின் மீது நடக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். ஒருபுறம், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இலங்கையின் ஆடை ஏற்றுமதிக்குத் தேவையான பிரதான சந்தைகள். மறுபுறம் ஈரான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் தேயிலை மற்றும் எரிபொருளுக்கான பங்காளிகள். "எங்களோடு இல்லாவிட்டால், எங்களுக்கு எதிரானவர்கள்" என்ற ரீதியில் ட்ரம்ப்பின் அணுகுமுறை அமைந்தால், இலங்கை தனது அணிசேராக் கொள்கையைத் தக்கவைப்பது பெரும் சவாலாக மாறும். அமெரிக்காவின் இந்த அதிரடி அறிவிப்புகள் நடைமுறைக்கு வரும் பட்சத்தில், இலங்கை தனது ஏற்றுமதிச் சந்தையை விரைவாக பல்வகைப்படுத்த வேண்டியிருக்கும். வெறுமனே மேற்குலகையோ அல்லது ஆசியாவையோ மட்டும் நம்பியிருக்காமல், புதிய வர்த்தக ஒப்பந்தங்களை நோக்கி நகரவேண்டும். உலக வல்லரசுகளின் மோதலில், இலங்கையைப் போன்ற சிறிய நாடுகளே முதலில் மாட்டிக்கொள்கின்றன. ஆகையால் நாட்டுக்கு வெளியே நடக்கும் விடயங்களில் நாம் பார்வையாளர்களாக இருந்துவிடமுடியாது. பொருளாதார விளிம்பில் நிற்கும் இலங்கை, இந்தச் சூறாவளியைச் சமாளிக்க மிகத் துல்லியமான இராஜதந்திர நகர்வுகளை ஆரம்பிக்கவேண்டியது கட்டாயம்.



## பொய்யாமொழி

ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்
வாரி வளங்குன்றிக் கால்

**பொருள்:** மழை என்னும் வருவாய் வளம் குன்றிவிட்டால், உழவுத்தொழில் குன்றிவிடும்.




## புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் நாட்டைப் பின்னோக்கியே தள்ளும்



*தலதா அத்துகோரள தெரிவிப்பு*

**கொழும்பு, ஜன.14**

**மக்களின் அடிப்படை உரிமையை மீறும், நாட்டை மீண்டும் பின்னடைவுக்குக் கொண்டுசெல்லும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை நடைமுறைப்படுத்தக்கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துகோரள வலியுறுத்தியுள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசாங்கம் கொண்டுவந்துள்ள அரசுக்கு எதிரான புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் பல விடயங்கள் மக்களின் அடிப்படை உரிமையை மீறும் வகையில் அமைந்துள்ளன. எமது நாடு சர்வதேச நாடுகளால் ஒதுக்கப்பட்டு மீண்டும் பின்னடைவடையும் ஆபத்து இருக்கிறது. அதனால் இந்தச் சட்டவரைவு தொடர்பில் அனைவரது கருத்துகளையும் கேட்டறிந்து செயற்படுத்த வேண்டும். புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவின் தகவல்களைத் தகவல் அறியும் சட்டத்தின் மூலமும் பெற்றுக்கொள்ளமுடியாதிருக்கின்றது-என்றார். (எ-இ)

## பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் இளைஞன் பலி

கொழும்பு, ஜன.14

வெலிக்கந்தையில் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகிநபரொருவர்நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். கூரிய ஆயுதத்தால் பொலிஸாரைத் தாக்க முயன்ற நபர் மீதே துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. உயிரிழந்தவர் இதற்கு முன்னர் 7 போதைப்பொருள் குற்றச்சாட்டுகள் தொடர்பில் சந்தேகநபராக காணப்பட்டதுடன், தற்போது மேலும் இரண்டு குற்றவியல் வழக்குகள் தொடர்பில் விசாரணைகளை எதிர்கொண்டு வந்தவர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ச-இ)



## இக்பால் அத்தாஸ் மறைவு

கொழும்பு.ஜன.14

மூத்த பத்திரிகையாளரும் பாதுகாப்பு ஆய்வாளருமான இக்பால் அத்தாஸ் தனது 81ஆவது வயதில் நேற்றுக் காலை காலமானார்.

பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு விவகாரங்கள் குறித்த ஆழமான அறிக்கையிடலுக்காக சர்வதேச அளவில் புகழ்பெற்ற அத்தாஸ், சண்டே டைம்ஸில் வெளியிடப்பட்ட போர்க்கால பாதுகாப்பு நிலைமை குறித்த சர்ச்சைக்குரிய மற்றும் செல்வாக்குமிக்க கட்டுரைக்காக பரவலான அங்கீகாரத்தைப் பெற்றவராவார். (ச)

## மான் தாக்கி விவசாயி சாவு

குருநாகல், ஜன.14

குருநாகல் பகுதியில் விவசாய நிலத்தைப் பாதுகாக்கச் சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த விவசாயி ஒருவர் மான் தாக்கியதில் உயிரிழந்துள்ளார். மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். உயிரிழந்தவர் 47 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## அநுராதபுரத்தில் விபத்து ஒருவர் பலி, 6 பேர் காயம்

அநுராதபுரம், ஜன.14

அநுராதபுரம் - ஓயாமடுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிக்கவெவ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் 6 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். முச்சக்கர வண்டி ஒன்றும் கார் ஒன்றும் மோதிக் கொண்டதாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் முச்சக்கர வண்டியின் சாரதியே உயிரிழந்துள்ளார். சம்பவம் குறித்து ஓயாமடுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

**நாளை**

வியாழக்கிழமை - தை-01

15.01.2026


சுபநேரம் : 08.04 - 09.34

ராகுகாலம் : 02.04 - 03.34


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### வடக்கு மாகாணத்தில்

# 37 இலட்சம் சதுரமீற்றர் நிலம் கண்ணிவெடிகளிலிருந்து விடுவிப்பு!

## 80,000 வெடிபொருள்கள் அகற்றம் ஸார்ப் நிறுவனம் தெரிவிப்பு

**முல்லைத்தீவு, ஜன.14**

**இலங்கையின் வடக்கு மாகாணத்தில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றல் பணியில் ஈடுபட்டுவரும் 'ஸார்ப்' நிறுவனம், கடந்த 10 ஆண்டுகளில் 7 இலட்சத்து 22 ஆயிரத்து 430 சதுரமீற்றர் நிலப்பரப்பில் சுமார் 80,614 அபாயகரமான வெடிபொருள்களை அகற்றி விடுவித்துள்ளது.**

இதுகுறித்து அந்த நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வு பெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவிக்கையில்,

ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் நிதியுதவியுடன் 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தற்போது வரை முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் 7 இலட்சத்து 22 ஆயிரத்து 430 சதுரமீற்றர் நிலப்பரப்பு துப்புரவு செய்யப்பட்டுள்ளது. இதில் 80, 614 கண்ணிவெடிகள் உள்ளிட்ட அபாயகரமான வெடிபொருள்கள் அகற்றப்பட்டுள்ளன. முல்லைத்தீவில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தச்சடம்பன், அம்பகாமம், ஒலுமடு, மாங்குளம் மற்றும் கொக்காவில் பகுதிகள். மேலும் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலும் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. கிளிநொச்சியில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகப் பிரிவின்கீழ் உள்ள முகமாலை, கிளாலி, இயக்கச்சி, ஆனையிறவு மற்றும் கண்டாவளைப் பிரதேச செயலகப் பிரிவின்கீழ் உள்ள தட்டுவன்கொட்டி ஆகிய பகுதிகளில் வெற்றிகரமாக கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. தற்போது புதுக்குடியிருப்பு, அம்பகாமம், மாங்குளம், கொக்காவில், தட்டுவன்கொட்டி மற்றும் ஆனையிறவு ஆகிய பகுதிகளில் எஞ்சியுள்ள கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை ஸார்ப் நிறுவனம் துரிதகதியில் முன்னெடுத்து வருகின்றது. (ச-55)

## பொலித்தீன், லஞ்சீற் பாவனை ஊர்காவற்றுறையிலும் தடை!

யாழ்ப்பாணம்,ஜன.14

ஊர்காவற்றுறைப் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் பொலித்தீன் மற்றும் லஞ்சீற் பாவனைக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. மீறுவோர் மீது கடுமையான சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தவிசாளர் அ.அன்னராசா தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் ஊர்காவற்றுறைப் பிரதேசசபையின் தவிசாளர் ஆகியோர் இணைந்து நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொலித்தீன் பாவனையால் பல்வேறுபட்ட நோய்கள் ஏற்பட்டு, தினமும் ஆயிரக்கணக்கானோர் உயிரிழக்கின்றனர். சுற்றுச்சூழலும் மாசடைகின்றது. எனவே பொலித்தீனுக்குப் பதிலாகத் துணியினாலான பைகளை மக்கள் பயன்படுத்தலாம். அதேபோன்று உணவகங்களில் லஞ்சீற்றைத் தவிர்த்து வாழையிலை, சுடுநீரில் சுத்தம் செய்த பீங்கான்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி உணவுகளைப் பரிமாறமுடியும்.

எனவே மக்கள் பிரதேசசபையின் அறிவுறுத்தலைப் பின்பற்றி ஒத்துழைப்பு வழங்கவேண்டும். பொலித்தீன் மற்றும் லஞ்சீற் பாவனை தொடர்பில் கண்டறியப்பட்டால் கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (க-27)



## பஸ் நிலையத்தை உடைத்து உட்புகுந்த கப்ரக வாகனம்!

யாழ்ப்பாணம்,ஜன.14

கப்ரக வாகனமொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து பேருந்துத் தரிப்பு நிலையத்தை உடைத்தெறிந்து உட்புகுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்து யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.

இதன்போது பேருந்துத் தரிப்புநிலையம் முற்றாகச் சேதமடைந்துள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்த வாகனமே வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த வாகனத்தில் பயணித்தவர்கள் தொடர்பாக எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை. வாகனத்தை மீட்ட கோப்பாய் பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ச-26)

## யாழ்.மாவட்ட ஓய்வூதியர்களுக்கு உயிர்வாழும் சான்றிதழ் பதிவுகள்

யாழ்ப்பாணம், ஜன.14

யாழ்.மாவட்ட ஓய்வூதியர்களுக்கான இந்த வருடத்துக்கான உயிர்வாழும் சான்றிதழ் பதிவுகள் பதிவுசெய்யப்பட்ட வங்கிகள் மற்றும் கிராம அலுவலர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை ஓய்வூதியத்திணைக்களத்திலிருந்து ஓய்வூதியம் பெறுபவர்கள் தங்களது உயிர்வாழ் நிலையை உரிய சான்றிதழ் மூலம் அல்லது விரல் அடையாளத்தை வருடாந்தம் புதுப்பிப்பதன் மூலம் உறுதிசெய்து கொள்ளவேண்டும்.

வருடாந்தம் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் புதுப்பிக்கப்படாவிடில் மே மாதத்திலிருந்து அவர்களுக்கான ஓய்வூதியம் நிறுத்தப்படும்.

2015.12.31க்கு முன் ஓய்வு பெற்றவர்கள் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் தமது கிராம அலுவலர்களை அணுகி அவர்கள் ஊடாக வழமைபோல் சான்றிதழைச் சமர்ப்பிக்கலாம்.

2016.1.1 இல் அல்லது அதற்குப் பின்னர் ஓய்வுபெற்றவர்கள் ஓய்வூதியத் திணைக்களத்தால் பரிந்துரைக்கப்பட்ட வங்கிகளுக்கு ஓய்வூதிய அட்டையுடன் சென்று கைவிரல் அடையாளத்தைக் கொடுத்தவுடன் உயிர்வாழ் சான்றிதழ் புதுப்பிக்கப்படும்.

புதுப்பிக்கப்பட்டதை உறுதிப்படுத்தும் குறுஞ்செய்தி(SMS) உடனடியாகவே பதிவு செய்த தொலைபேசி இலக்கத்துக்குக் கிடைத்துவிடும்.

வடக்கு மாகாணத்தில் பான் ஏசியா வங்கி(யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நெல்லியடி),மக்கள் வங்கி (பருத்தித்துறை, சங்கானை, சாவகச்சேரி , சுன்னாகம், கிளிநொச்சி,மன்னார், வவுனியா) தேசிய சேமிப்பு வங்கி (யாழ்ப்பாணம்), செலான் வங்கி (யாழ்ப்பாணம், வவுனியா) இலங்கை வங்கி (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா) ஆகிய 5 வங்கிகள் விரல் அடையாளம் கொடுக்கக் கூடிய வங்கிகளாக உள்ளன. (க-9)

## பராமரிப்பற்ற காணிகளை உடன் சுத்தம் செய்யுங்கள்

### ஊர்காவற்றுறைப் பிரதேசசபை அறிவுறுத்து

யாழ்ப்பாணம்.ஜன.14

ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்த பலர் தங்கள் வீடுகள் மற்றும் காணிகளைவிட்டு வேறு இடங்களில் தங்கியிருப்பதால் அங்கு சட்டவிரோதச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன என்று ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தவிசாளர் அ.அன்னராசா தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டவிரோதச் செயற்பாடுகளால் குறித்த காணிகள் மற்றும் வீடுகளுக்கு அருகே வசிக்கும் மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன் பற்றைகளாக உள்ள காணிகள் நுளம்புப் பெருக்கம் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளுக்கும் காரணமாக அமைந்துள்ளன.

எனவே குறித்த காணிகள் மற்றும் வீடுகளின் உரிமையாளர்கள் இவற்றைச் சுத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு சுத்தம் செய்யத் தவறும் பட்சத்தில் பிரதேசசபை கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும்-என்றார். (க-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு நாட்டு மீனவர்களின் விவகாரம் அரசியலாக்குகிறார் தமிழக முதல்வர்

## வடக்கு கடற்றொழில் இணையம் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஜன.14**

**எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு இந்திய, இலங்கை மீனவர்கள் விவகாரத்தை அரசியலாக்கி, தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பிரதமர் நரேந்திர மோடிக்குக் கடிதங்களை எழுதுகின்றார் என்று வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் உறுப்பினர் அ.அன்னராசா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த சில நாள்களாக தமிழ்நாட்டின் புதுச்சேரி, இராமேஸ்வரம், நாகபட்டினம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் வடமராட்சிக் கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் வடமராட்சிக் கிழக்கு மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று நெடுந்தீவு மற்றும் அனலைதீவுக் கடற்பரப்பிலும் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்கின்றன. இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பை அழித்துக்கொண்டிருக்கின்றசூழ்நிலையில், மீனவர்களின் பிரச்சினையைத் தீர்க்குமாறு கோரி, தமிழக முதலமைச்சர் இந்தியப் பிரதமருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார். பிரதமருக்குக் கடிதத்தை எழுதி அரசியல் நாடகம் போடவேண்டாம். அவர் நினைத்தால் தமிழகத்தில் உள்ள அனைத்து இழுவைமடித் தொழில்களையும் நிறுத்தலாம். தன்னுடைய அதிகாரத்தின்கீழ் இருக்கின்ற மீனவர்களை, 4 வருடங்களாகப் பதவியில் இருக்கின்றவர் கட்டுப்படுத்தாமல், அந்தப் பிரச்சினையை அரசியலாக்குவது நல்லதல்ல-என்றார். (க-27)



# புனரமைக்கப்பட்ட வீதி புலம்பும் மாணவர்கள்!

யாழ்ப்பாணம்,ஜன.14

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியின் பிரதான வாயில் பகுதியில் மழைநீர் தேங்கிநிற்பதால் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தம்பசிட்டி வீதிப் புனரமைப்பின்போது உயரமாக அமைக்கப்பட்டதும் முறையான நீர் வடிகால் வசதி இல்லாமையுமே இந்த வெள்ளப் பாதிப்புக்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பாதணிகளுடன் வெள்ளத்தில் நடக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மேலும், வீதியோரம் சமன் செய்யப்படாததால் மாணவர்களை ஏற்றி இறக்கும் பெற்றோரும் விபத்து அபாயத்தை எதிர்கொள்கின்றனர். இந்தப் பிரச்சினைக்கு பருத்தித்துறை நகரசபை உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாகத் தீர்வுகாணவேண்டும் எனப் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-100)




# இராணுவத்தின் கடைக்கு பருத்தித்துறையில் பூட்டு

## நகரசபை அதிரடி

யாழ்ப்பாணம்,ஜன.14

பருத்தித்துறை துறைமுகப்பகுதியில் உணவு கையாளும் நிலையமாகச் செயற்பட்டு வந்த இராணுவ வியாபார நிலையத்தைப் பூட்டுவதற்கு பருத்தித்துறை நகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

குறித்த பகுதியில் இராணுவ முகாமுடன் இணைந்த வகையில், கடை ஒன்று இராணுவத்தினரால் நடத்தப்பட்டு வந்தது.

இந்தப் பகுதிக்குச் செல்லும் இளைஞர்களுக்கு வயது வேறுபாடின்றி சிகரெட் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்ட நிலையில் பருத்தித்தறை நகரசபைத் தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில், நகரசபைப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ப.தினேஷ் உள்ளிட்ட குழுவினர் நேற்று இராணுவ விற்பனை நிலையத்துக்குச் சென்று சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது வியாபார உரிமம் பெறப்படாது குறித்த நிலையம் இயங்குகின்றமை கண்டறியப்பட்டது. அதனையடுத்து தற்காலிகமாக மூடுமாறு அறிவுறுத்தப்பட்டது. (க-100)

# கூட்டுறவாளர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் கையளிப்பு!

யாழ்ப்பாணம்,ஜன.14

யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு 21 இலட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.


சமாசத்தின் சமுக அபிவிருத்தித் திட்ட நிதியிலிருந்து சுமார் 2 ஆயிரத்து 400 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வருடந்தோறும் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-17)

# ஆய்வுகூடத் திறப்பும் பரிசளிப்பு விழாவும்

சாவகச்சேரி, ஜன.14

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தின் விஞ்ஞான ஆய்வுகூடம் மற்றும் கட்டடங்களின் திறப்புவிழா மற்றும் வருடாந்த பரிசளிப்பு விழா வித்தியாலய அரங்கில் எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளக்கிழமை பி.ப.2மணிக்கு இடம்பெறவுள்ளது. மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய பழையமாணவரும், அமெரிக்கா விஞ்ஞானியுமான பேராசிரியர் சிவலிங்கம் சிவானந்தனின் நிதிப்பங்களிப்புடனும் இலங்கை விமானப்படையின் ஒத்துழைப்புடனும் இவை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பேராசிரியர் சி. சிவானந்தன், சிறப்பு விருந்தினராக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் கிருஷாந்த அபேசேன ஆகியோர் கலந்துகொள்வர் (ச-41-9)



# பிணையில் வந்த டக்ளஸ் விகாராபதியுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜன.14

கம்பஹா நீதிவான் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கொழும்பு கங்காராம விகாராதிபதி கலாநிதி. வண. கிருந்தே அஸ்ஸாஜி நாயக்க தேரரை மரியாதையின் நிமிர்த்தம் சந்தித்து ஆசிகளையும் பெற்றுக்கொண்டார். உங்களது அரசியல் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்று விகாராதிபதி டக்ளஸுக்கு ஆலோசனை தெரிவித்தார். (க-27)

# போதைக்குத் தோதான இடமாக மாறிய பழைய சுங்கக் கட்டடம்!

## நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

போதைப்பொருள் பாவனையில் ஈடுபவர்களின் புகலிடமாகப் பருத்தித்துறை பழைய சுங்கக்கட்டடம் மாறியுள்ள நிலையில், அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தொல்பொருள் திணைக்களத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பாரம்பரிய இடங்களில் தொல்பொருள் திணைக்களம் அறிவிப்புப் பலகைகளை நட்டுவரும் நிலையில், சமூக ஆர்வலர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர். பருத்தித்துறை துறைமுகத்தில் அமைந்துள்ள பழமைவாய்ந்த சுங்கக் கட்டடம் சிதைந்த நிலையில் உள்ளது. துறைமுகப் பகுதிக்கும் வரும் இளைஞர்கள் மது மற்றும் புகைத்தலில் ஈடுபடவே அந்தக் கட்டடத்துக்கு வந்துசெல்கின்றனர். சிலர் வேறு போதைப்பொருள்களைப் பயன்படுத்துவதற்கான மறைவிடமாக அந்தக் கட்டடத்தைப் பயன்படுத்துகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மக்கள் நடமாட்டம் மிக்க அந்தப் பகுதியில் நடைபெறும் சமூகச் சீரழிவு நடவடிக்கைகளைத் தடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில், இந்த விடயத்தில் நேரடியாகத் தலையிட முடியாது என்றும், பருத்தித்துறைப் பிரதேச செயலகம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தொல்பொருள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (எ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 14.03.1949 | 15.12.2025 |



## அமரர் மனோரஞ்சிதமலர் ஜேசுராஜன் (பேபி)

எம்மை ஆறாத்துயரில் விட்டுச்சென்ற எமது அன்புத் தெய்வம் இறைபதமடைந்தபோது ஆறுதல் கூறி அன்புக்கரம் நீட்டி உடனிருந்து ஆவன ஆற்றிய அன்புள்ளங்களிற்கு உள்ளங்கனிந்த நன்றியை நவில்கின்றோம்.

எங்கள் குலவிளக்கு வைத்தியசாலையில் இருந்தபோது அன்னாரிற்கு சிகிச்சை அளித்த வைத்தியர்கள், தாதியர், ஊழியர்கட்கும், எமது ஆழ்ந்த கவலையின்போது நேரில் பங்குபற்றித் தேற்றியவர்கட்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும், மாலைகள் அணிவித்து மலர் வளையம், Banner வைத்தோரிற்கும், தொலைபேசி மூலம் எமது கவலையில் பங்கெடுத்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், சமூகவலைத்தளங்களில், பத்திரிகைகளில் அனுதாபச் செய்தி அனுப்பியோரிற்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும், இறுதிச் சடங்குகளை நிகழ்த்திய கிறிஸ்தவ குருமாருக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டோர் அனைவருக்கும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள், ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்த்திய இந்து குருமார்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி

(CS/30920) J-1

# மரண அறிவித்தல்

## கந்தையா நடராசா

(முன்னாள் கூட்டுறவுச் சங்கங்க முகாமையாளர் - அச்சுவேலி)



| மண்ணில் | விண்ணில் |
| --- | --- |
| 13.01.1943 | 12.01.2026 |

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், புன்னாலைக் கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும், அச்சுவேலி கூட்டுறவுச்சங்க முன்னாள் முகாமையாளருமான கந்தையா நடராசா அவர்கள் கடந்த (12.01.2026) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், நடராசா இராசராணியின் அன்புக் கணவரும், மகாலிங்கம் (ஜேர்மனி), கோபாலகிருஷ்ணன் (டென்மார்க்), காலஞ்சென்றவர்களான கமலாதேவி, பரிமளாதேவி, வகிந்தநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இராமசாமி, சரஸ்வதி, நவரத்தினம், சந்திரதேவன் மற்றும் தருமதுரை, சரோஜினிதேவி ஆகியோரின் மைத்துனரும், சிறீகரன் (பிரான்ஸ்), சிறீதரன் (பின்லாந்), சிறீரஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், லாவண்யா, வனிதா, ராஜேந்திரலிங்கம் ஆகியோரின் மாமனாரும், அஸ்வின், ஆதர்ஷா, ஜெய்ஷா, மாதுஜா, ஆருஷன், அபிஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.01.2026) புதன்கிழமை மு.ப 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
077 402 3386
புன்னாலைக் கட்டுவன் தெற்கு.

(CS/31249) J-1

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 20.09.1942 | 12.01.2026 |



## பேதுரு விக்ரர்

யாழ்ப்பாணம், பாஷையூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பேதுரு விக்ரர் அவர்கள் கடந்த (12.01.2026) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேதுருப்பிள்ளை - சேயம்மா தம்பதியரின் அன்பு மகனும், கிறிஸ்ரீனம்மாவின் பாசமிகு கணவரும், மேரி ஜெனிற்றா (மொயிறா - சுவிஸ்), நிஷாந்தன் றனி (மாகாணக் கல்வித்திணைக்களம், வடக்கு மாகாணம்) ஆகியோரின் பாசத்துக்குரிய தந்தையும், ஜெனி, டோலின், சுதர்சன், யதீசா ஆகியோரின் சிறிய தந்தையும், அருணின் பாசமிகு மாமாவும், காலஞ்சென்றவர்களான பேதுரு ஆரோக்கியநாதர், யேசுதாசன் கொலஸ்ரிக்கா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, அன்னம்மா ஆகியோரின் பாசமிகு மூத்த மருமகனும், கெனடி (சுவிஸ்), அலிக்ஸ்மலா (கியூபா) ஆகியோரின் நேசத்துக்குரிய மாமனாரும், ஜெனிக்சன், றுபின்சன், றுபினா (சுவிஸ்), நிஷாரா, அகர்ஷா ஆகியோரின் பாசமிகு பேரனும், பாலதாஸ் சின்னமணியின் ஆருயிர் மச்சானும், சந்திரா யேசுதாசன், மரியமலர் (கனடா) ஆகியோரின் அத்தானும், தங்கம், யேசுதாசன், காலஞ்சென்ற பாக்கியையா பீற்றர் மற்றும் சில்வேஸ்ரர் (கனடா), பவானி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (14.01.2026) புதன்கிழமை பி.ப 03.00 மணியளவில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
மகன் - 077 712 2686, மகள் (சுவிஸ்) - +41 796 453 127
பாஷையூர், யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 18.01.1940 | 11.01.2026 |



## கந்தையா இராசரத்தினம் (குரு)

(இளைப்பாறிய பதிவாளர் - கிளிநொச்சி காணித்திணைக்களம் & யாழ்ப்பாணம் நீதிமன்றம், சமாதான நீதவான்)

யாழ். புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி படித்த வாலிபர் திட்டத்தின் முதலாம்பண்ணை, யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவில் தலையாழி வீதி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசரத்தினம் அவர்கள் கடந்த (11.01.2026) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கைச்சிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், சாவகச்சேரி சங்கத்தானை ஆசிரியர் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சபாபதி பொன்னையா - அன்னபூரணி அம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புனிதராணி அவர்களின் அன்புக் கணவரும்,,

சுதர்ஜனா (ஐக்கிய அமெரிக்கா), கோதர்ஜனா (பிரித்தானியா), புனிதராஜன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அம்பிக்குமார், விஜயகுமார், கௌரி ஆகியோரின் அன்பு மாமனாரும், Dr. ஆதித்தன், ஆதிரை (ஐக்கிய அமெரிக்கா), ஆதவன், ஆதனி (பிரித்தானியா), அச்சுதன், அபிராமி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான இராசகிருஸ்ணர், தம்பிமுத்து மற்றும் தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சகுந்தலாதேவி மற்றும் நேசமலர், அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான குகதாசன், புவனராணி மற்றும் குலதாசன் (ஜேர்மனி), குணதாசன் (கனடா), Dr. புஸ்பராணி (Rada- ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.01.2026) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் யாழ். தலையாழி வீதி, நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
புனிதராஜன் (மகன்) - +61 422 182 372, 076 783 0839,
சுதர்ஜனா (மகள்) - 076 717 7136, கோதர்ஜனா (மகள்) - +44 772 346 5129,
இல. 958/39 காங்கேசன்துறை வீதி, தலையாழி வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

(CS/60448) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## டித்வா புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரச சாரதிகள் சங்கம் 50,000 ரூபா உதவி

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நாட்டைக் கட்டியெழுப்பும் நிதியத்துக்கு, வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கத்தினர் 50 ஆயிரம் ரூபா நிதியுதவியை வழங்கி யுள்ளனர். சங்கத்தினரால் உறுப்பினர்களிடமிருந்து திரட்டப் பட்ட 50 ஆயிரம் ரூபா பணம் வைப்பிலிடப்பட்ட ஆவணம், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது. (க-66,113)



நீண்டகாலமாக சேதமடைந்து காணப்பட்ட சரசாலை வடக்கு கொம்பிகுளம் இந்துமயான எரிகொட்டகையின் கூரை சமூக ஆர்வலர் சின்னத்தம்பி ஸ்ரீபாஸ்கரனால் வழங்கப்பட்ட 4 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா நிதியில் திருத்தப்பட்டுள்ளது. (ச-41-9)




## யூனியன் குளத்தில் வயல் விழா

யாழ்ப்பாணம்,ஜன.14

இயந்திர நாற்றுநடுகை மூலம் நடுகை செய்யப்பட்ட நெல் வயல் அறுவடை விழா, யூனியன்குளம் பகுதியில் நேற்று நடைபெற்றது.

மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், யூனியன் விழுதுகள் இளைஞர் விவசாயக் கழகத்தின் பங்களிப்புடன் இந்த நிகழ்வு நடைபெற்றது. அக்கராயன்குளம் விவசாயப் போதனாசிரியர் கி. சுதர்சினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சண்முகராஜா சிவசிறீ, மாகாண மேலதிக விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன், கிளிநொச்சி பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.சோதிலட்சுமி, பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாயப் போதனாசிரியர்கள்மற்றும்விவசாயிகள் கலந்துகொண்டனர். (க-113)



## சடலத்தைப் பொறுப்பேற்குக

யாழ்ப்பாணம்,ஜன.14

யாழ்.போதனா மருத்துவமனையில் கடந்த வருடம் நவம்பர் மாதம் 12 ஆம் திகதி 2ஆம் இலக்க விடுதியில் அனுமதிக்கப்பட்டு, கடந்த முதலாம் திகதி உயிரிழந்தவரின் சடலத்தை அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

பன்சல வீதி மட்டக்களப்பைச் சேர்ந்த விஜயலக்சுமி யோகராசா(வயது-48) என்பவரது சடலமே உரிமை கோரப்படவில்லை. எனவே குறித்த சடலத்தை அடையாளம் காட்டி உரியவர்களைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.போதனா மருத்துவமனையின் பிரதிப்பணிப்பாளர் எ.திலீபன் கேட்டுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கலைவிழா

ஆறுமுகநாவலர் பெருமானின் குரு பூசை தினத்தின் தொடர்ச்சியாகச் சைவபரிபாலன சபை அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை விழா யாழ்.நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. சைவபரிபாலனசபையின் பொருளாளர் கலாநிதிபா. காசிநாதன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது நாவலர் குருபூசையை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தப்பட்ட கட்டுரை, பேச்சுப் போட்டிகளில்வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ச-41-66)


## மரண அறிவித்தல்

பிறப்பு 20 . 11 . 1938



இறப்பு 12 . 01 . 2026

### சின்னத்தம்பி கார்த்திகேசு

அவர்கள்

கடந்த 12.01.2026 திங்கட்கழமை அன்று காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.01.2026)
புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

வேலணை கிழக்கு,
4ம் வட்டாரம், வேலணை.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 31003) A



## மரண அறிவித்தல்



### திருவாளர் நாகலிங்கம் முத்தையா (முத்து)

(ஓய்வுபெற்ற லிகிதர்)

புங்குடுதீவை பிறப்பிடமாகவும் நயினாதீவு மற்றும் கொக்குவில் என்பவற்றை வாழ்விடமாகவும் கொண்ட திருவாளர் நாகலிங்கம் முத்தையா (முத்து) ஓய்வுபெற்ற லிகிதர் அவர்கள் கடந்த (12.01.2026) திங்கட்கிழமை காலமானார்

அன்னார் நாகலிங்கம் - அமராவதி தம்பதியரின் மகனும், வேலாயுதம் - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக்கணவரும், காலம்சென்றவர்களான கதிரவேலு, சண்முகநாதன், அன்னமுத்து, செல்லத்துரை, மார்க்கண்டு ஆகியோரின் உடன்பிறந்த சகோதரரும்,

அருள்மொழி, கௌரீசன், சபேசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கனகரத்தினம், கௌரி, பிரேமினி ஆகியோரின் மாமனாரும் மயூரன், ஹரிணி, ஹரித்திரா, ஆரபி, அக்ஷயன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரிகைகள் நாளை மறுதினம் (16.01.2026) வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக முற்பகல் 10.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 912 3776
44 அச்சுக்கூட வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(CS/31002) J-1



## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 17.12.2025 அன்று சிவபதமடைந்த
எங்கள் அன்புத் தெய்வம்

அமரர்

### கந்தசாமி ஆனந்தமூர்த்தி (வைகுந்தம்)

(பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 16.01.2026 வெள்ளிக்கிழமை காலை 4.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் காலை 8.30 மணியளவில் இடம்பெற்று தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

உற்றார், உறவினர்கள் அனைவரும் இவ் அழைப்பை தங்களுக்குரிய தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

நாகர்கோவில் மேற்கு,
நாகர்கோவில்.

குடும்பத்தினர்.
T.P.No:0773773404 / 0766356514

(CS/31004)



## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 02 . 1954



மறைவு 13 . 01 . 2026

### வேலாயுதம் ரோகினீஸ்வரி

(யா/ மகாஜனக் கல்லூரி பழைய மாணவி)

தெல்லிப்பளை, அம்பனையை பிறப்பிடமாகவும், அளவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் வேலாயுதம் ரோகினீஸ்வரி அவர்கள் நேற்று (13.01.2026) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் சிதம்பரப்பிள்ளை - மாமாங்கம் தம்பதியரின் அன்பு மகளும், கந்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வேலாயுதம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, யோகேஸ்வரி, மகேஸ்வரி, ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருட்செல்வி, மலர்ச்செல்வி, அரவிந்தன் (பிரதேச செயலகம் - கண்டாவளை), வைகுந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நவகுமார் (சிற்றூழியர் யா/ மல்லாகம் தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்டவித்தியாலயம்), சத்தியகுகன் (சிங்கப்பூர்), சோபனா (ஆசிரியர் கிளி/ வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்), துவாரகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் பொன்னம்மா, காலஞ்சென்ற விஸ்வலிங்கம், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், இரத்தினம், துரைராசா, ஜெயராசா மற்றும் லலிதாம்பிகை (ஆச்சி), காலஞ்சென்றவர்களான குணராசா, வியாளம்மா (கிளி), செல்வராசா, சறோசாதேவி (தங்கம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், நர்மிதன், நயனிகா, கஜனிகன், சங்கீதன், மகிஷா, ரசிகா, அம்ஷிகி, ஆருத்ரா, ஆதிரை ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.01.2026) புதன்கிழமை பி.ப 04.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அளவெட்டி கேணிப்பிட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
077 896 0992, 077 896 1020
பத்துப்பனையடி, அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

(CS/30920) J-1


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை
14.01.2026 புதன்கிழமை

கண் ஒரு உறுப்பு, பார்வை ஒரு கலை.
- மார்ஷ்

# இலங்கையின் கல்விமுறைமையில்

# புதிய சீர்திருத்தம்

## அமுலுக்கு வரும் புதிய நடைமுறைகள்



■ யோ.அ.தவநாயகம்

வளர்ந்து வரும் நாடுகளில் காலத்தின் தேவைக் கேற்ப கல்வியில் சீர்திருத்தங்களும், மாற்றங்களும் இன்றியமையாதவை. அதுவே காத்திரமான வளர்ச்சிக்கும். வளர்ச்சியின் நிலைத்த தன்மைக்கும் உறுதுணையாக அமையும். கல்வி முறைமையானது தற்காலச் சவால்களையும், எதிர்கால எதிர்நோக்குகளையும் வெற்றிகொள்ளும் வகையில் அமைந்திருத்தல் அவசியமாகும். அப்போதே அந்தநாடு வளர்ந்து செல்லும் நாடாக தற்கால உலகில் மிளிரமுடியும். அந்தவகையில் எமது நாட்டின் கல்வி முறைமையானது நாடு எதிர்நோக்கும் சவால்களுக்குத் தீர்வுகாணும் வகையில் நடைமுறைப்படுத்தப்படல் காலத்தின் தேவையாகும்.

இலங்கையில் சுதந்திரத்துக்குப் பின்னர் காலத்துக்குக்காலம் கல்வியில் சீர்திருத்தங்கள் மற்றும் கலைத்திட்ட மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும் அவை தேவைகளை நிறைவேற்றியவையாக அமைந்து விடவில்லையென்பதே யதார்த்த நிலையாகும். காலனித்துவக் காலச்சாயலிலிருந்து முற்றாக விடுபடாத ஒரு கல்விமுறைமையே இன்றுவரை எமது நாட்டில் தொடர்கின்றது. வெறும் பரீட்சை மையம் சார்ந்த ஒரு பொதுக்கலைத்திட்டமே கல்வியின் எல்லா மட்டங்களிலும் ஆதிக்கம் பெறுகின்றது. இந்த நிலையில் கல்வி முறைமைக்கும் வேலையுலகுக்கும் இடையே பெரியதொரு இடைவெளி நிலவுகின்றது. தற்கால வேலையுலகுக்குத் தேவையான கல்வி மற்றும் தொழிற்றிறன் மிக்க தொழிற்படையினர் இன்மையே வேலையுலகுடன் பொருத்தப்பாடற்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது. இதன் விளைவே எமது தொழிற்படையில் வேலையற்றோரின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், அதுவே வேலையற்ற பட்டதாரிகள் என்ற புதியதொரு வர்க்கத்தை எம்மத்தியில் உருவாக்கவும் காரணமாகியுள்ளது.

அந்தவகையில் நாடு எதிர்நோக்கும் சமூக பொருளாதார அரசியற் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் வகையிலான கல்விச் சீர்திருத்தம் இலங்கையில் மேற்கொள்ளப்படுதல் காலத்தின் தேவையாகும். தொழிற்சந்தைக்குப் பொருத்தப்பாடான தயார்ப்படுத்தல், பல்லின சமூக கலாசாரச் சூழலுக்கு இசைதல், தேசிய ஒருமைப்பாட்டுச் சிந்தனையை வளர்த்தல் போன்ற எமது அடிப்படைத் தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையிலான கல்விமுறைமை எமது நாட்டில் அமையப் பெறுதலே இன்றைய அவசியமாகும்.

2026ஆம் ஆண்டுமுதல் நடைமுறைப்படுத்தும் வகையில் கல்வி உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு 'கல்வியில் மாற்றம். நாட்டில் மாற்றம்' எனும் தலைப்பில் புதியகல்விச் சீர்திருத்தத்தை முன்வைத்துள்ளது. இந்தச் சீர்திருத்தமானது தேசிய மக்கள் சக்தி அர சாங்கத்தின் முன்மொழிவாக அல்லாது 2019ஆம் ஆண்டு முதல் 2025ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக கல்வி மறுசீரமைப்புத் தொடர்பாக நிபுணத்துவக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த கலந்துரையாடல்கள். பரிசோதனைகள். பகுப்பாய்வு நடவடிக்கைகள் மூலம் இறுதி செய்யப்பட்ட முன்மொழிவுகளாகும்.

இந்தப் புதியகல்விச் சீர்திருத்தமானது எத்தகைய எதிர்பார்ப்புக்களைக் கொண்டுள்ளது என நோக்கின் அதன் பிரதான இலக்கு '21ஆம் நூற்றாண்டின் மற்றும் அதற்குப் பிந்தியதான சவால்களுக்குத் தயாராகவிருக்கும் ஒரு குடிமகனை உருவாக்குவதற்கான அடித்தளத்தை அமைப்பது மற்றும் நிலையான தேசிய அபிவிருத்தி மற்றும் நாட்டின் அமைதிக்கான செயற்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்தல்' என்பதாக முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இங்கு எதிர்பார்க்கும் இலக்கை வலுப்படுத்தும் வகையில் வலுவான உபாயங்களை இனங்கண்டு சீர்திருத்தத்தின் பிரதான நோக்கங்களாக முன்வைக்கப்படுகின்றது.

அந்தவகையில்

1. பாடத்திட்டத்தின் பொருத்தப்பாட்டையும் தரத்தையும் மேம்படுத்தல்
2. கற்றலின் அடைவினை மேம்படுத்தல்
3. விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துறையின் சேர்க்கையை அதிகரித்தல்
4. நிலைக்கத்தக்க அபிவிருத்தி மற்றும் குடியியற்கல்வியை மேம்படுத்தல்
5. 21ஆம் நூற்றாண்டின் திறன்களை விருத்தியாக்கல்.
6. சமத்துவம் மற்றும் உள்ளடக்கலையும் உறுதிப்படுத்தல்
7. பாடசாலைக்கும் சமூகத்துக்குமான உறவினை வலுப்படுத்தல்.
8. தேசிய கல்வி இலக்குடன் இணங்குதல்
9. தொழில்முனைவோர் மனப்பாங்கினை விருத்தியாக்கல் என்பன இந்தச் சீர்திருத்தத்தின் பிரதான நோக்கங்களாகும். இந்த நோக்கங்கள் யாவும் தற்கால எதிர்பார்ப்புகளுக்கு ஏற்புடையதாக அமைந்துள்ளமை சிறப்பாகும்.

மேலும் இந்தச் சீர்திருத்தமானது அடிப்படையான கல்வி எண்ணக்கருக்கள் சிலவற்றை பிரதான வழிகாட்டற் கொள்கையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடுகின்றது.

இலவசக்கல்வி மற்றும் அனைவருக்கும் கல்வி, மனிதவள விருத்தி மற்றும் வேலையுலகுக்கான பொருத்தப்பாடு, அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுதல், சமூகத்துக்குப் பொறுப்புக் கூறத்தக்க பொருத்தப்பாடுடைய குடிமகன், நிலைக்கத்தக்க தன்மை மற்றும் புத்தாக்கம், வாழ்க்கை நீடித்த கல்வி ஆகிய நவீன கல்வி எண்ணக்கருக்கள் இந்த முழுமையான மறுசீரமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளாகக் கொள்ளப்பட்டுள்ளது.

**தாங்கு தூண்கள்**

அடுத்து இந்தப் புதிய கல்விச் சீர்திருத்தமானது ஐந்து பிரதான தாங்கு தூண்களைக் கொண்டுள்ளது.

1. கலைத்திட்ட மறுசீரமைப்பும் அபிவிருத்தியும்
2. மனிதவள அபிவிருத்தி
3. உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியும் நிர்வாக மறுசீரமைப்பும்
4. கணிப்பீடு மற்றும் மதிப்பிடு
5. பொது விழிப்புணர்வுத் தெளிவுபடுத்தல் மற்றும் பிரசாரம் ஆகியனவே அவையாகும்.

பாடசாலைக் கல்வித் தரநிலையின் ஒவ்வொரு கட்டத்திலும் கலைத்திட்ட மறுசீரமைப்பும் அபிவிருத்தியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முன்பள்ளிப்பருவம் இரு வருடங்களைக் கொண்டதாகவும், வாழ்நாள் முழுவதற்குமான கற்றலுக்கான அடித்தளத்தை வழங்குவதாகவும், தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையான ஆரம்பக்கல்விப் பருவத்தில் ஐந்து வருடங்கள் அடிப்படை வாழ்க்கைத் தேர்ச்சிக்கான கல்வியை வழங்குவதாகவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் தரம் ஆறு முதல் தரம் ஒன்பது வரையான நான்கு வருடங்கள் கொண்ட கனிஷ்ட இடைநிலைப் பருவத்தில் வாழ்க்கைக்கான அடித்தளத்தினை வழங்கும் வகையிலும், தரம் பத்து முதல் தரம் பதினொன்று ஆகிய இரு வருடங்களைக் கொண்ட சிரேஷ்ட இடைநிலையின் முதற்கட்டத்தில் தொழிற்கற்கைக்கான அடித்தளத்தையும், சிரேஷ்ட இடைநிலையின் இரண்டாம் கட்டத்தில் (தரம் 12, 13) கல்வி மற்றும் தொழில் வாழ்க்கைக்கான அடித்தளத்தையும் வழங்கும் வகையில் இந்தக் கலைத்திட்டமானது வடிவமைக்கப்பட்டுள்ளது.

முன்பள்ளிப் பருவக் கற்றலுக்காக முன்பள்ளிப் பருவக் கல்விக் கொள்கை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதுடன், ஆரம்பக் கல்வித் தரத்தில் செயற்பாடு சார்ந்த ஒன்றிணைந்த பாடத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஆரம்பக் கல்விப் பருவமானது தற்போது நடைமுறையிலுள்ளது போன்று மூன்று முதன்மை நிலைகளைக் கொண்டதாகவும், மூன்று முதன்மை நிலைகளுக்கும் பொதுவான கற்றற் பகுதிகளைக் கொண்டதாக ஒன்பது பாடங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

தாய்மொழி, கணிதம், ஆங்கிலமொழி, இரண்டாம் மொழி, சமயம் மற்றும் விழுமியக்கல்வி, ஆரம்ப விஞ்ஞானம் மற்றும் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், ஒன்றிணைந்த அழகியற்கல்வி, உடல்நலம் மற்றும் உடற்கல்வி, மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் ஆகியன ஆரம்பக்கல்வியின் செயற்பாடு சார்ந்த ஒன்றிணைந்த கற்றலுக்கான கற்றற் பகுதிகளாகும்.


இங்கே ஆரம்ப விஞ்ஞானம், விழுமியக்கல்வி உடல்நலம் மற்றும் உடற்கல்வி என்பன விசேடித்துச் சேர்க்கப்பட்டுள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

2026ஆம் ஆண்டு முதல் தரம் ஒன்றில் இந்தக் கலைத்திட்டம் செயற்படத் தொடங்குகின்றது. 2030ஆம் ஆண்டில் தரம் ஐந்து வரை அமுலாகும்.

அடுத்த வாரம் தொடரும்........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதைப்பையில் விதைகள் இறங்காமை



## காலம் தாழ்த்தாத சிகிச்சை அவசியம்

மருத்துவர் பா.சயந்தன்
குழந்தைகள், சிறுவர்கள் சத்திரசிகிச்சை நிபுணர்
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் சிரேஷ்ட விரிவு
ரையாளர் மருத்துவ பீடம் யாழ்ப்பாணம்

ஆண் குழந்தைகளின் விதைப் பையினுள் விதைகள் இறங்காதிருத்தல் 'கிரிப்டோர்கிடிசம்' என அழைக்கப்படும். இது சிசுக்களில் பொதுவாக காணப்படும் நிலைமை ஆகும். இது ஒன்று அல்லது இரு விதைகளும் விதைப்பையினுள் பிறப் பிற்கு பின்னர் இறங்காதிருக்கும் நிலைமை ஆகும். இலங்கையில் பல பெற்றோர்கள் இது சம்பந்தமான விழிப்புணர்வு இல்லா மல் இருக்கின்றார்கள். மேலும் இதற்கான சிகிச்சை முறைகள் மற்றும் ஆரம்ப காலத் தில் இதை எவ்வாறு கண்டுபிடித்தல் போன்ற விளக்கமின்மை காரணமாக சிசுக்களின் வாழ்வில் பாரதூரமான விளைவுகளை இவை ஏற்படுத்தக் கூடும்.

கர்ப்பகாலத்தின் போது சாதாரணமாக ஆண் குழந்தைகளில் விதைகளானது வயிற்றின் உட்புறமாக விருத்தியடையும். குழந்தை பிறப்பதற்குச் சில மாதங்களிற்கு முன்னர் விதைகள் விதைப்பையினுள் இறங்கும். இருப்பினும் 3 தொடக்கம் 5 வீதமான நிறைப்பிரசவ ஆண் குழந்தைக ளிற்கு ஒன்று அல்லது இரு விதைகளும் விதைப்பையினுள் இறங்காதிருக்கலாம். இது மிகவும் அதிகளவில் குறைப்பிரசவக் குழந்தைகளில் காணப்படும்.

சில நேரங்களில் இயற்கையாகவே விதைப் பையினுள் இறங்காத விதைகள் குழந்தை பிறந்து சில மாதங்களினுள் இறங்கும். ஆனால் அவை விதைப்பையினுள் இறங் காது ஆறு மாதங்களுக்கு மேலாக வயிற் றறைக் குழியினுள்ளேயே காணப்படின் சிகிச்சை மிகவும் அவசியமானது.

### ஆரம்பகாலச் சிகிச்சை ஏன் அவசியம்

சில பெற்றோர்கள், குழந்தை வளரும் போது இறங்காத விதைகள் தானாகவே விதைப் பையினுள் இறங்கும் என நம்புகின்றார்கள். இருப்பினும் ஆறு மாதங்களுக்குப் பின்னர் தானாகவே விதைகள் விதைப்பையினுள் இறங்குவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவானது. சிகிச்சையானது தாமதிக் கப்படின் இது பாரதுரமான விளைவுகளை ஏற்படுத்தும். அவையாவன

### மலட்டுத்தன்மை ஏற்படும்

விதைகள் சாதாரணமாகத் தொழிற்படுவ தற்கு அவற்றிற்குத் தேவையான வெப்ப நிலையானது சாதாரண உடல் வெப்பநி லையை விடக் குறைவானதாகும். இதுவே சிறந்த விந்துற்பத்திக்கு அத்தியாவசியமா னது. ஆனால் விதைகள் விதைப்பையி னுள் இறங்காமல் வயிற்றறைக் குழியினுள் காணப்படின் அவற்றின் வெப்பநிலையா னது அதிகரித்து விந்தணு உற்பத்தியாகு வதற்குத் தேவையான அத்தியாவசியமான கலங்களை நிரந்தரமாக அழிக்கும். இதன் மூலம் விந்துற்பத்தி குறைவடைந்து இல்லா மல் போகும்;. மருத்துவ ஆராய்ச்சிகளின்படி சிகிச்சைகளிற்கு உட்படுத்தப்படாத ஆண் பிள்ளைகள் வளரும்போது அவர்களின் மலட்டுத்தன்மை குறிப்பிடத்தக்களவு அதி கரித்துக் காணப்படுகின்றது.

### புற்று நோய்க்கான வாய்ப்பு

விதைப்பையினுள் இறங்காத விதையானது விதைப்புற்று நோய்க்கு அதிகரித்த வாய்ப் பைப் பெற்றுக்கொள்கின்றது. சாதாரணமாக விதைப்பையினுள் விதைகள் இறங்கிக் காணப்படும் ஆண் பிள்ளைகளுடன் ஒப்பி டும் போது இவர்களுக்கான புற்று நோய்க் கான வாய்ப்பு அதிகமாகும். ஒரு வயதுக்கு முன்னர் இவர்களுக்குரிய சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும் போது புற்று நோய்க் கான வாய்ப்பைக் கணிசமான அளவில் குறைக்கப்பட முடியும். மேலும் விதையில் புற்றுநோய் ஏற்பட்டால் இலகுவாக பரிசோ தனை செய்துகொள்ளமுடியும்.

அவர்களுக்குத் தேவையான சிகிச்சையா னது ஒரு சத்திரசிகிச்சை மூலம் மேற் கொள்ளப்படும்;. இது 'ஓர்கிடோபெக்ஸி' என அழைக்கப்படும். இதன்போது விதைகள் விதைப்பையினுள் கொண்டுவரப்பட்டு அவ் விடத்தில் வைத்துப் பொருத்தப்படும்;. இது ஒரு சாதாரண அறுவை சிகிச்சையாகப் பொது மயக்க மருந்து வழங்கிச் செய்யப்ப டும். 'ஓர்கிடோபெக்ஸி' செய்யப்படுவதற்கு தேவையான சரியான நேரம் ஆறு மாதம் தொடக்கம் ஒரு வயதுக்கு இடைப்பட்ட கால மாகும். இக்குறிப்பிட்ட காலத்தில் சத்திரசி கிச்சையானது மேற்கொள்ளப்படும் போது குழந்தையின் எதிர்காலக் கருவள ம் சம்பந்தமான பிரச்சினைகள் கணிசமான அளவில் குறைக்கப்படும்.

### பெற்றோர்கள் என்ன செய்ய வேண்டும்?

ஆரம்ப காலத்திலேயே இந்த நிலையைக் கண்டறிந்து கொள்ளல் அவசியமானது. ஒவ்வொரு பெற்றோரும் அவர்களுடைய குழந்தையின் விதைகள் விதைப்பையி னுள் இறங்கி இருக்கின்றனவா என்பதைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். இரண்டு விதைகளும் விதைப்பையினுள் இறங்கி இருககின்றனவா என்பதைச் சாதாரணமான குழந்தைகளுக்கான கிளினிக்கின் போது மருத்துவர்கள் பரிசோதித்துப் பார்ப்பார்கள். சந்தேகப்படக்கூடிய விதத்தில் விதைப்பை யினுள் விதைகள் இறங்காது இருப்பின் தாமதிக்காமல் குழந்தை சிறுவர் சத்திரசி கிச்சை நிபுணரிடம் அனுப்பப்பட வேண்டும். பெற்றோர்கள் ஆறு மாதம் வரைக்கும் விதைப்பையினுள் விதைகள் இறங்கும் என எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டிய தேவை இல்லை. சரியான நேரத்தில் சத்திரசிகிச்சை மேற்கொள்வது குழந்தைக்குப் பாதுகாப்பா னதாகும். அப்போது வினைத்திறனுடன்; எதிர்காலத்தில் வரக்கூடிய பிரச்சினைகளை நீக்கிக் கொள்ள முடியும்.

# தமிழ் ஆளும்...

வயவை லம்போ

ஒருநாள் ஒருநாள்
என் நிலைமை மாறும்
மறுநாள் மறுநாள்
பரணி எனைப் பாடும்

திருநாள் திருநாள்
வளமாய் வந்து சேரும்
வரும்நாள் வரும்நாள்
மகிழ்ச்சியில் ஆடும்

அத்திசை இத்திசை
எத்திசையும் கொடி ஏறும்
ஐம்பெரும் காப்பியமும்
அகிலத்தை ஆளும்



இருகை இருகை
வான் நோக்கி உயரும்
இறக்கை இறக்கை
எனக்கும் முளைக்கும்

பெருமை பெருமை
எனை வந்து கூடும்
அட எதிலும் என்
உரிமை நிறைவேறும்

அருமை அருமை என
கண்டங்கள் போற்றும்
கண்டங்கள் யாவும்
எனைக் கண்டு வியக்கும்

ஊருக்கும் பாருக்கும்
தாய் நானென அறிவாய்
கல்லையும் பிடுங்கிப் பார்
அதன் வேரிலும் அறிவாய்


நான்...நான்...என்பதை தீ
கொண்டு கலைத்து
நாம்... நாம்... என்ற
திமிரோடு தமிழ் எனை உயர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணமும் விவசாயமும்

● லி.கருனிகா



விவசாயமே தமிழரின் முதன்மைத்தொழில் என்பதற்கு யாழ்ப்பாணத்து மக்களின் வாழ்வியல் நல்லதொரு எடுத்துக் காட்டு.

தலைமுறை தலைமுறைகளாக கடைப்பிடித்துவரும் விடயங்களையே பண்பாடு என்பர். அந்தவகையில் பல தலைமுறைகளாக விவசாய நிலங்களோடு யாழ்ப்பாணத்து மக்கள் இணைந்து வாழ்ந்துவருவதைக் காணமுடிகிறது. அரச தொழிலில் ஈடுபட்டாலும் விவசாயத்தைக் கைவிடாத மக்களாகவே இன்றும் யாழ்ப்பாணத்து மக்கள் இருக்கிறார்கள். அந்தவகையில் மக்களின் வாழ்வாதாரமாக விளங்குகின்ற விவசாயமும் ஒரு கலையாகவே காணப்படுகிறது. அதாவது இயற்கை கொடுத்த நிலத்தைப் பயன்படுத்தி பதப்படுத்தி பயிர், வளர்ச்சி, பருவம், காற்று, மழை, உரம், அறுவடை என்ற பல பாணிகளாக இந்தக் கலையிடம்பெறுகிறது. யாழ்ப்பாணத்தின் மண்வளம் விவசாயத்திற்கென அமைந்த கொடையாக விளங்குகின்றது.

விவசாயம் நமது பாரம்பரிய வாழ்வாதார முறையாக உணவுத்தேவைகளைப் பூர்த்திசெய்யும் முதன்மைத் தொழிலாக இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் நெற்பயிர்ச் செய்கை, தானியங்கள், மரக்கறிகள் என விவசாயம் செய்யப்படுகின்றது. பெரும்பாலும் நெல்லுக்கான வயல்நிலங்கள் அதிகமாகக் காணப்படுகிறன. இவையெல்லாம் நமக்கு உணவாக மட்டுமல்ல, நாட்டின் பொருளாதாரத்தையும் உயர்த்துகின்றன. ஆனால், சமீப காலங்களில் விவசாயம் பல சவால்களை எதிர்கொண்டு வருகிறது. "நிலக்குறைப்பு" அதாவது விவசாய நிலங்களை அழித்து தமது குடியிருப்பை அமைத்துக் கொள்ளும் நடவடிக்கை என்பது மக்கள் மத்தியில் அதிகரித்துவருகிறது. இதனால் யாழ்ப்பாணத்தில் பண்பாடாக விளங்குகின்ற விவசாயம் சற்று அழிவடைகிறது.

மேலும் "நீர்மட்டம் குறைதல், காலநிலை மாற்றம்" விவசாயத்துக்கு பருவகாலம் என்பது மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. அந்தவகையில் நீர்மட்டம் குறைவதோ அதிகரிப்பதோ விவசாயத்தைப் பாதிக்கின்ற செயற்பாடாகவே காணப்படுகிறது. அண்மையில் இடம்பெற்ற டித்வா புயல்கூட விவசாயத்தை அழிவடைய வைத்த ஒரு காரணியாகவே விளங்குகின்றது. இளைஞர்களின் மாற்றமும் யாழ்ப்பாணத்தில் விவசாயத்தை வீழ்ச்சிபெற வைத்தது. அதாவது மேற்கத்தேய கலாசாரங்கள், பண்பாடுகள் இளைஞர்கள் மத்தியில் ஊடுருவியதால் யாழ்ப்பாணத்துப் பண்பாடாக காணப்படுகின்ற விவசாயம் கைவிடப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகியது. மற்றும் பொருளாதாரச் சிக்கல்கள் விவசாயத்தைப் பாதிக்கின்றன. அதேபோன்று தொழில்நுட்ப நவீனத்துடன் விவசாயம் ஒன்றிணைக்கப்படாததால், உற்பத்தி குறைந்து வருகிறது.

இவ்வாறான சவால்களை விவசாயம் எதிர்கொண்டாலும் அதனைத் தடுத்து இயற்கை விவசாயம், சுயஉற்பத்தி விவசாயம் போன்ற நவீன வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்படவேண்டும். அரசு மற்றும் தனியார் துறைகளின் உதவியோடு, இளைஞர்களை விவசாயத்தில் ஈடுபடுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எமது யாழ்ப்பாணத்துப் பண்பாடாகிய விவசாயத்தை அழியவிடாது காப்பாற்றவேண்டும். யாழ்ப்பாணம் என்றால் விவசாயமே அதன் அடையாளம். அந்த அடையாளத்தை உயிர்ப்பிக்கவேண்டும். விவசாய வளர்ச்சியே, யாழ்ப்பாண மக்களின் நலனுக்கும், பண்பாட்டுத் தொடர்ச்சிக்கும் அடித்தளமாக இருக்கும். எனவே விவசாயம் உயிர் என்று எண்ணி அதை உயிரோடு வைத்திருக்க நாம் ஒட்டுமொத்தம் முயற்சி செய்யவேண்டும்.



## அழிவில் மலரும் ஐக்கியப் பூங்கா!

அன்னை இயற்கையின்
படைப்பியக்க உயிர்மையின்
உன்னதத்தை உணரத்திராணியற்று
ஆதிக்க வெறிபிடித்த, உலக அரசுகளின்
விஞ்ஞானத்தின் எதிர்மறை
விளைவுகளால் காலநிலை மிரண்டு
கதிகலங்கும்....!

வானமே கடலின்
வதிவிடமாக காற்றின்
கொடிய நடனம் புயலாக
மழைக்கீற்றுகளைப் புரட்டிப்போட
தேசம் இங்கே அழிவின் கைதியாக
ஆற்றவொண்ணாத் துன்பம்
அலைமோதும்....!

மனிதனின் ஆணவ மிடுக்கு....!
அன்னை இயற்கையே...!
உன் மனதை ஒடுக்கியதோ.....?
உனது கருணை காணாமற்போக
இல்லங்களும் மானிட
உள்ளங்களும் மண்ணில் புதைய....!
ஐயகோ......!

அவலங்களின் சந்நிதியாக
நாடே வெள்ளத்தின்
உள்ளகக் கைதியாக
ஏதுமறியாத மானிட ஜீவன்கள்
அழிவின் ஆக்கிரமிப்பில்
உனது இரங்கும் இறை உணர்வு
எங்கே தொலைந்தது.....?

உனது மண்ணின் மடியில்
தவழ்ந்த குழந்தைகள்.... முதியோர்
பெண்கள்... என எத்தனை...?
அத்தனை மன்பதையும் உன்
பிள்ளைகள் என்பதையும்
மறந்தாயோ....?
விண்ணின் துளிகள்
ஆறாய் பெருக தேசத்தின்
மண்ணுள் புதைந்தனவே....
எண்ணவே இதயம் வலிக்கும்
துன்பம் கொளிக்கும்....?
மண் மலைகளை இழுத்துப்புரட்டி
உனது படைப்புக் குழந்தைகளை
ஏன்.... உனது ஈர்ப்புக்கு இரை
கொடுத்தாயா...?

அழிவின் கொடுந்தழுவல்
இன,மத எல்லைகளைக் கடந்து
ஒரு தேசமாக மானிட
நேசமாக சௌக்கியம் கலைந்து
சாவின் விழிம்புவரை
கொண்டு சேர்க்க..... ஐக்கியம்
இங்கே மானிட இதயங்களை
நலம் விசாரித்து ஒருங்கிணைக்கும்.....!
ஒரு தேசத்தின் ஒன்றிப்பு
துயரங்களின் கொடூரம் தோய்ந்த
அரவணைப்பைத் துரத்தும்.....!


● ஆனையூர்க் கவிராயர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இனத்தின் இருப்பே

# நிலத்தின் இருப்பு!

○ பழனித்துரை தர்மகுமாரன்
ஆசிரியர்
உடுவில் மகளிர் கல்லூரி



தமிழர்கள் பிறப்பால் குறையும்போது, தமிழ்த்தேசம் நிலத்தால் குறுகும் நிலை உருவாகுவது தவிர்க்கமுடியாததாக அமையும். அண்மைய காலங்களில் தமிழர் தேசத்தில் பிறப்புவீதம் குறைவடைந்து இறப்புவீதம் அதிகரித்து வருகின்றது. அதிலும் இளவயது மரணங்கள் வகைதொகையின்றி அதிகரித்துள்ளன. அதற்குக் காரணம் விபத்து, தொற்றாநோய்கள், உயிர்மாய்ப்புகள், உறுப்புகள் பாதிப்படைதல் எனக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

இலங்கையைப் பொறுத்தவரையில் பெரும்பான்மை இனத்தவர் சிங்களவர்கள். இவர்கள் ஒட்டுமொத்த மக்கள் சனத்தொகையில் 74.88 சதவீதமாக உள்ளனர். தமிழர்களின் எண்ணிக்கை சனத்தொகையில் 15.37 சதவீதமாகும். இந்தத் தொகை இந்தியத் தமிழரையும் சேர்த்ததாக அமைகின்றது. முஸ்லிம்கள் 9.25 சதவீதம், பறங்கியர் 0.18 சதவீதம், வேடுவர் 0.14 சதவீதம் என்பதாக ஏனைய சமூகங்களின் சனத்தொகைகள் அமைகின்றன.

இனக்கட்டமைப்பு என்று நோக்கும்போது சிறுபான்மை இனங்களின் அரசியல், பொருளாதாரம், முயற்சியாண்மை, இனப்பெருக்கம், கல்வி, கலை, கலாசாரப்பண்பாடுகள் குறைந்தும், சிதைந்தும் செல்கின்றன. இதற்கு ஆரோக்கியம் குறைந்து காணப்படுதல், பொருளாதாரப் பிரச்சினைகள், வேலையில்லாப் பிரச்சினை, மேற்படிப்புக்கு அதிககாலத்தைச் செலவு செய்தல், தாமதமான திருமணம், குழந்தை பெற்றுக்கொள்வதைத் தள்ளிப்போடுதல் உள்ளிட்டவற்றைக் காரணங்களாகக் கூறிக் கொள்ளலாம்.

திருமணமாகி தமது தனிப்பட்ட காரணங்களுக்காக குழந்தை உருவாவதைத் தவிர்க்கும் மாத்திரைகளின் பயன்பாடு அதிகரித்துள்ளமை, மதுபானம், புகைத்தல், போதைப்பொருள் பாவனை, இளவயதிலேயே தொற்றாநோய்களுக்கு உட்படுகின்ற, வேலைவாய்ப்புக் காரணமாக கணவன் மனைவி பிரிந்து வாழ்தல் என்பனவும் பிறப்புவீதம் குறைவதற்கான காரணிகளாக அமைகின்றன. கட்டிளமைப் பருவத்தில் விடப்படும் தவறுகளான சரியான உணவுப்பழக்கமின்மை, மாதவிடாய்ச் சக்கரத்தில் ஏற்படும் மாற்றம், சரியான ஓய்வும் உறக்கமும் கடைப்பிடிக்காமை, குருதிச்சோகை நோய்க்கு உள்ளாகுதல், உடற்பயிற்சி செய்யாமை, அசைவுத்திறன் குறைகின்றமை என்பனவும் தவிர்க்கமுடியாத காரணிகளாகவே அமைந்துள்ளன.

**எமது இனத்தின் இருப்புத்தான் எமது நிலத்தின் இருப்பு. இனத்தைத் தொலைத்துவிட்டு, நிலத்தின் இருப்பைப் பாதுகாப்பது சாத்தியமே அல்ல. எனவே, தம்மீதுள்ள பொறுப்பை தமிழ்ச்சமூகம் உணர்ந்துகொள்ள வேண்டும்**

### சனத்தொகை குறைவதால் ஏற்படும் பெரும் பாதிப்புகள்

சனத்தொகை தமிழர் பிரதேசத்தில் குறைவடைவதனால் ஏற்படப்போகும் சிக்கல்களாக கல்வித்தரப்படுத்தலில் பாதிப்பு, நிலப்பரப்பு பறிபோகும் அபாயம், விளையாட்டுகளில் தேசிய அணியில் உள்வாங்கப்படுவது கனவாகவே காணப்படும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவடையும்,

தொழில் நிபுணத்துவம் குறைந்து செல்லும், கடல் வளம் சூறையாடப்படும், பல பாடசாலைகள் மூடப்படும் நிலை, தொழில்வாய்ப்பில் பிரச்சினை, அரசியல் பொருளாதாரப் பலம் இழக்கப்படும் நிலை என அடுக்கிக்கொண்டே போகலாம்.

தமிழர் தேசத்தில் பிறப்பு வீதத்தை அதிகரிப்பதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளவேண்டும். அத்தகைய நடவடிக்கைகளால், கட்டிளமைப்பருவ காலத்தில் உணவுப்பழக்கவழக்கம், பாலியல் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மருத்துவர்களின் ஆலோசனையின்றி மருந்துகளைப் பாவிப்பதைத் தவிர்த்தல், போதைப்பொருள், மதுபானம், புகைத்தல் பாவனையைக் கட்டுப்படுத்தல், பிள்ளைப்பருவத்தில் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் பாதிப்பு ஏற்படாது பாதுகாத்தல். அத்துடன் குழந்தை பெற்றுக்கொள்வோருக்கான சன்மானங்கள், அரச உதவிகள், சலுகைகள், ஊக்குவித்தலை வழங்குதல். அது எத்தனை குழந்தைகளுக்கு மேல் காணப்படவேண்டும் என வரையறை செய்தல். அதேபோல் ஆன்மிக அமைப்புகள் அதிக குழந்தைகளைப் பெறுவோருக்கு பொருளாதாரச் சுமையைக் குறைக்க உதவுதல் நம்பிக்கையை ஏற்படுத்துதல் என்பன அமைகின்றன.

இன்றைய காலகட்டத்தில் வீதிகள் தமிழரின் தலைவிதியைத் தீர்மானிக்கும் அளவுக்கு விபத்துகள் அதிகரித்துள்ளன. இலங்கையில் ஒரு நாளில் மூன்று தொடக்கம் நான்கு வரையானவர்கள் விபத்துகளால் இறக்கின்றனர். இதற்கு வீதிகளின் விதிமுறைகளை சரியாகக் கடைப்பிடிக்காமை, கவனயீனம், வீதியின் அளவுப்பிரமாணத்தை மீறிய வாகனங்கள், போதைப்பொருள் பாவனை, கைத்தொலைபேசிப் பாவனை, ஆரோக்கியம் குன்றியமை எனப் பல காரணங்கள் உள்ளன.

### மேலத்தேய உணவால் சுருங்கும் சனத்தொகை

மேலைத்தேய உணவுகளான விரைவுணவு, பதப்படுத்தப்பட்ட உணவுகள் எமது கலாசாரத்தினுள் விதைக்கப்பட்டு விருட்சமாக்கப்பட்டமை, சரியான உணவுப்பழக்கத்தைக் கைவிட்டமை, முறையான உடற்பயிற்சி இல்லாமை, மதுபானம், புகைத்தல் அதிகரித்தமை என்பனவும் எமது இனம் சுருங்கிச் செல்வதற்குக் காரணிகளாக அமைகின்றன.

அத்துடன் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்வோரையும் இதில் குறிப்பிட்டுக் கூறமுடியாமல் இருக்கமுடியாது.

எமது இனத்தின் இருப்புத்தான் எமது நிலத்தின் இருப்பு. இனத்தைத் தொலைத்துவிட்டு, நிலத்தின் இருப்பைப் பாதுகாப்பது சாத்தியமே அல்ல. எனவே, தம்மீதுள்ள பொறுப்பை தமிழ்ச்சமூகம் உணர்ந்துகொள்ளவேண்டும். அது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலைப் புலிகள் உள்ளிட்ட

# 16 அமைப்புகளுக்கு தொடர்கிறது தடை!

கொழும்பு, ஜன. 14

தமிழீழ விடுதலைப்புலிகள் உட்பட 16 அமைப்புகள் மற்றும் 206 தனிநபர்கள் மீது ஸ்ரீலங்கா அரசாங்கம் தடை விதித்து நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான பயங்கரவாத அமைப்புகள் மற்றும் தனிநபர்களுக்கு எதிரான தடைப் பட்டியலை ஸ்ரீலங்கா அரசாங்கம் அவ்வப்போது புதுப்பித்து வருகின்றது. ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்தின் கீழ், இந்தப் பட்டியல் அண்மையில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இதன்போதே, விடுதலைப்புலிகள் உட்பட 16 அமைப்புகள் மற்றும் 206 தனிநபர்கள் மீது தடை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழர் புனர்வாழ்வு அமைப்பு, தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, உலகத் தமிழர் இயக்கம், நாடு கடந்த தமிழீழ அரசு, உலகத் தமிழர் நிவாரண நிதியம், தலைமையகக் குழு, கனேடிய தமிழர் தேசிய அவை, தமிழ் இளைஞர் அமைப்பு மற்றும் சேவ் த பேர்ள்ஸ் ஆகிய தமிழ் அமைப்புகளின் பெயர்கள் தடைப் பட்டியலில் உள்ளன.

தடை விதித்து அறிவிக்கப்பட்டுள்ள நபர்கள் மற்றும் அமைப்புகளுடன் தொடர்புகளைப் பேண வேண்டாம் என்று ஸ்ரீலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது. அவ்வாறு தொடர்பைப் பேணினால், அது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கக் காரணமாக அமையும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## சோமரத்ன ராஜபக்சவின் சாட்சியத்துக்கு அமைய

# புதைகுழி அகழ்வுகள் மேலும் விரிவடையும்!

கொழும்பு, ஜன. 14

கிருசாந்தி குமாரசாமி படுகொலை வழக்கின் மரண தண்டனைக் கைதியான சோமரத்ன ராஜபக்சவிடமிருந்து பெறப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய, செம்மணி மனிதப் புதைகுழியை அண்மித்த பகுதிகளில் அகழ்வுகள் முன்னெடுக்கப்படும் என காணாமல் போனோர் அலுவலகம் அறிவித்துள்ளது.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள சோமரத்ன ராஜபக்சவிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் குறித்து, காணாமல் ஆக்கப்பட்டோரின் தொடர்பில் ஆராயும் அலுவலகத்தின் அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை நேரில் சென்று விசாரணைகளை நடத்தியிருந்தனர். இதையடுத்து, இந்த விவகாரம் தொடர்பில் காணாமல் போனோர் தொடர்பில் ஆராயும் அலுவலகத்தின் தலைவர் மகேஸ் கட்டுலந்த தெரிவித்ததாவது:-

சோமரத்ன ராஜபக்சவிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை தொடர்பில் மதிப்பாய்வு செய்யப்பட்டு அதனை, மனிதப் புதைகுழி அகழ்வில் ஈடுபடும் நிபுணர்களுடன் கலந்தாலோசித்து, நீதிமன்ற உத்தரவு பெறப்படும்.

அதன் பின்னர், நவீன ரக ரேடார் ஸ்கானர்களை பயன்படுத்தி, செம்மணி மனிதப் புதைகுழியை அண்மித்த பகுதிகளில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படும். சோமரத்ன ராஜபக்ச சத்தியக் கடதாசி ஊடாக தெரிவித்துள்ள பல விடயங்கள் குறித்தும் அவரிடம் விசாரணைகள் இடம்பெற்றுள்ளன.

எனினும், தன்னை விடுதலை செய்வதற்கான பரிந்துரைகளை முன்வைக்குமாறு சோமரத்ன ராஜபக்ச முன்வைத்த கோரிக்கை தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கான அதிகாரம் எமது அலுவலகத்திற்கு கிடையாது என்றார். (ம)

## கல்வி...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு, அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் அமைச்சர் தெரிவித்ததாவது:-

நாட்டில் கல்வி மறுசீரமைப்பு நடைபெறும் என ஜனாதிபதித் தேர்தலின் போதும், பொதுத்தேர்தலின்போதும் நாங்கள் உறுதியளித்தோம். அதை ஏற்றே மக்கள் எமக்கு ஆணை வழங்கினார்கள்.

ஐந்து கட்டங்களாக கல்வி மறுசீரமைப்பு இடம்பெறவிருந்தது. முதலாவதாக தரம் 1 மற்றும் தரம் 6 மாணவர்களுக்கான கல்வித் திட்டம் மறுசீரமைக்கப்படவிருந்தது. எனினும், தரம் 6 ஆங்கில பாடத்திட்டத்தில் உள்ள விடயம் தொடர்பில் சர்ச்சை எழுந்துள்ளது. சிலர் இதை அரசியலுக்காகவும், இன்னும் சிலர் தங்களுக்கு எதிரான வழக்குகளில் இருந்து தப்பிக்கவும் பயன்படுத்துகின்றனர். சிலர் அதிகார ஆசையில் களத்துக்கு வந்துள்ளனர். கல்வி மறுசீரமைப்புத் தொடர்பில் சமூகத்தில் நம்பிக்கையின்மை ஏற்படுத்தப்படுகின்றது. நம்பிக்கை இன்மையுடன் இந்தப் பணியைச் செய்ய முடியாது என நாம் கருதுகின்றோம்.

தரம் 6 ஆங்கில பாடத்திட்டம் தொடர்பில் எழுந்த சர்ச்சை தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணை நடத்தியது. கல்வி அமைச்சும் விசாரணை நடத்தி வருகின்றது. ஆதலால், 6ஆம் தரத்துக்குரிய கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கை 2027ஆம் ஆண்டுவரை பிற்போடப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-44)

## டாவோஸ்...

தலைமையிலான குழுவினர் கலந்து கொள்ளவுள்ளனர்.

19ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள இந்த மாநாட்டின் துணை அம்சமாக, உலகத் தலைவர்கள் பலருடன் பிரதமர் ஹரிணி இருதரப்புச் சந்திப்புக்களையும் நடத்தவுள்ளார். முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும், சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்கான வழிகள் குறித்தும் அவர் கவனம் செலுத்துவார் என்று தெரியவருகின்றது. (அ-ம-44)

## நம்பிக்கையில்லா...

ளது. பிரதமர் ஹரிணிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சிகள் நடவடிக்கை எடுத்து வந்தன. எனினும், இதுவரை அத்தகைய பிரேரணைகள் எவையும் சமர்ப்பிக்கப்படவில்லை. இவ்வாறான நிலையிலேயே, நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படும் பட்சத்தில் 20ஆம் மற்றும் 21ஆம் திகதிகளில் விவாதத்துக்கு எடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று தெரியவருகின்றது. (அ-ம-44)

## பிரபல..

காணாமல் போயுள்ளன என்று தெரியவருகின்றது. மத்திய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இது தொடர்பான முறைப்பாட்டை வழங்குவதற்கும், மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்குமான நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன. (அ-ம-26)

## வடக்கின்...

தினர் ஆகிய தரப்பினரை ஒன்றிணைத்து, வடக்கின் பொருளாதாரத்தை வளப்படுத்தும் முக்கியமான நடவடிக்கையாக இந்த மாநாடு அமைந்துள்ளது.

வடமாகாணத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இதுவரை பல மாநாடுகள் நடைபெற்றுள்ள போதிலும், முற்றுமுழுதாக முதலீட்டாளர்களை மையப்படுத்தி இடம்பெறும் முதலாவது மாநாடாகவும் இது காணப்படுகின்றது.

சிறு மற்றும் நடுத்தர தொழில்கள், இளங்கலை மற்றும் பட்டதாரி மாணவர்கள் உள்ளிட்ட தொழில்முனைவோர், முதலீட்டு வாய்ப்புகள், கொள்கை விளக்கங்கள், நிதி வழி[illegible] மற்றும் வழிகாட்டுதல் ஆகியவற்றை நேரடியாக அறிந்து கொள்வதற்கு இந்த மாநாடு பெரும் வாய்ப்பாக அமையும் என்று ஏற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம)

## 10 தமிழக...

கட்டுப்படுத்துவதற்காக இலங்கையின் கடற்பரப்புகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மீண்டும் பலப்படுத்தப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக நேற்று அதிகாலை விசேட கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட கடற்படையாலேயே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைதான மீனவர்கள் அனைவரும் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். யாழ்ப்பாணம் நீரியல் வளத் திணைக்களத்தின் ஊடாக அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தக் கைது நடவடிக்கைக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்திய வெளிவிவகார அமைச்சுக்கும், இந்தியப் பிரதமர் அலுவலகத்துக்கும் அவர் கடிதமும் அனுப்பியுள்ளார். (அ-ம-26-100-66)

## வல்வைப்...

கள் நிறைவடைந்துள்ளன. வல்வெட்டித்துறை உதயசூரியன் கடற்கரையில் நாளை பிற்பகல் ஒரு மணிமுதல் இந்த விழா இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## அடுத்த...

கூறியதாவது:-

அடுத்த போகத்தில் இருந்து, சம்பா மற்றும் கீரி சம்பா நெல் வகைகளின் விலைகளை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆயினும் அரிசி விலையில் அதிகரிப்பு ஏற்படாது. நெல் விலை திருத்தம் தொடர்பாக ஏற்கனவே நாங்கள் சில விடயங்களை முன்வைத்துள்ளோம். நாட்டு நெல் 120 ரூபாவாகவே நீடிக்கும். சம்பா நெல்லின் விலை 125 ரூபாவிலிருந்து 130 ரூபா வரை அதிகரிக்கப்படும் - என்றார். (அ-எ-இ)

## அமைச்சரவை...

இருந்து நீக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. இந்தக் கோரிக்கையை முன்வைத்து, முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ உணவுத் தவிர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றார்.

இவ்வாறான நிலையிலேயே, அமைச்சரவையில் எந்தவொரு மாற்றமும் செய்யப்படாது என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். பிரதமர் பதவியிலும், கல்வி அமைச்சர் பதவியிலும் ஹரிணியே தொடர்வார். அவர் மீது எமக்கும் மக்களுக்கும் நம்பிக்கை உள்ளது என்றும் அமைச்சர் நளிந்த கூறியுள்ளார்.

விமல் வீரவன்ஸவின் கோரிக்கையை அரசாங்கம் செவிமெடுக்காது. அவருடைய கோரிக்கையை நாங்கள் திட்டவட்டமாக நிராகரிக்கின்றோம். எனவே, விமல் வீரவன்ஸவின் உணவுத் தவிர்ப்புப் போராட்டம் தொடர வேண்டும். அதுவே எங்களின் விருப்பம் என்று அமைச்சர் நளிந்த மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-ம-44)

## ஹெரோய்னுடன்...

குக் கிடைத்த தகவலுக்கு அமைய இடம்பெற்ற விசாரணைகளின் அடிப்படையிலேயே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்களும் 30 மற்றும் 31 வயதுடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவர்களில் ஒருவரிடம் இருந்து 3 கிராம் ஹெரோய்னும், மற்றையவரிடம் இருந்து 6 கிராம் ஹெரோய்னும் மீட்கப்பட்டுள்ளது.

6 கிராம் ஹெரோய்னை உடமையில் வைத்திருந்த நபரைத் தடுத்துவைத்து விசாரணை நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதைப் போட்டியில்
# சுபாஷ்கரன் சிவப்பிரியா தேசியத்தில் முதலிடம்!



அரச உத்தியோகத்தர்களுக்கான இவ்வருட ஆக்கத்திறன் போட்டியில், சிறுகதைப் பிரிவில், வடக்கு மாகாண காணித் திணைக்கள முன்னாள் உதவி ஆணையாளரும், கூட்டுறவுத் திணைக்கள வடமாகாண உதவி ஆணையாளருமான திருமதி சுபாஷ்கரன் சிவப்பிரியா (இலங்கை நிர்வாக சேவை) எழுதிய 'அவள் தாயாகிறாள்' சிறுகதை முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இலங்கை புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் இந்தப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. விருது வழங்கும் விழா, அலரி மாளிகையில் அண்மையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(அ-ம-க)



யாழ். இந்தியத் துணைத்தூத ரகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 200 பேருக்கு பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன. யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரகத்தின் துணைத் தூதுவர் சாய் முரளி, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் உள்ளிட்டோர் பயனாளிகளுக்குப் பொதிகளை வழங்கினர். (க-113)

## சேவைநலன் பாராட்டு விழா



யாழ்ப்பாணம், ஜன.14

கொக்குவில் அஞ்சலகத்தின் பொறுப்புத் தபாலதிபராக 4 வருடங்களாக கடமையாற்றி சுண்டுக்குளி அஞ்சலகத்தின் தபாலதிபராக இடமாற்றம் பெற்றுச் செல்லும் இ.லம்பேர்ட்டின் சேவைநலன் பாராட்டு விழா கொக்குவில் அஞ்சலக மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. கொக்குவில் அஞ்சலகச் சமூகத்தினரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

(ச-41-66)

## தைப்பொங்கல் சிறப்புப் பூசை

யாழ்ப்பாணம்,ஜன.14

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் ஸ்ரீ கண்ணகையம்மன் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு தைப்பொங்கல் நிகழ்வும், சிறப்புப் பூசை வழிபாடு

களும் இடம்பெறும். மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு பிரதோச விரத அபிஷேக ஆராதனை நிகழ்வு இடம்பெறும். (க)

## பொங்கல் பொதி

யாழ்ப்பாணம்,ஜன.14

யாழ்.மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் மற்றும் அங்கத்தவர்களுக்குப் பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அரிசி, சர்க்கரை, பயறு, தேங்காய்,பானை என்பன பொங்கல் பரிசாக சங்கங்களால் வழங்கப்பட்டு வருகின்றன. (க-17)

## வாசிப்பு மாத பரிசளிப்பு

மயிலிட்டிப் பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாதப் பரிசளிப்பு விழாவும், இறுதி நிகழ்வும் குரும்பசிட்டிப் பொதுநோக்கு மண்டபத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும்.

மயிலிட்டி உப அலுவலகப் பொறுப்பதிகாரி நா.விஜேந் திரன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் தவிசாளர் சோம சுந்தரம் சுகிர்தன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் செயலாளர் சிவகுமார் சிவானந்தன் ஆகியோர் கலந்துகொள்வர். (க-66)

## வெங்காயச் செய்கை குடாநாட்டில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.14

குடாநாட்டில் சின்ன வெங்காயச் செய்கையை விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர். பருவப்பெயர்ச்சி மழையையும் பொருட்படுத்தாது, அநேகமான மேட்டு நிலங்களில் சின்னவெங்காயச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கனவே கடந்த டிசெம்பர் மாதம் சின்ன வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. அவை தற்போது பூக்க ஆரம்பித்துள்ளதால் அதன் அறுவடையும் இடம்பெறுகின்றது.

வெங்காயப்பூ கிலோ 700 ரூபா முதல் 800 ரூபாவரை தற்போது விற்பனை செய்யப்படுகின்றது. (க-17)

**வேலைவாய்ப்பு**

தென்மராட்சியில் இயங்கிவரும் கட்டிட முன்னணி நிறுவனத்திற்கு

- முகாமைத்துவ உதவியாளர்
- கணக்காளர்

தேவை

E-mail - mthinesh80@gmail.com

Whatsapp: 077 666 9933

(CS/60447) J-1

**பணிப்பெண் தேவை**

யாழ். நல்லூரில் உள்ள வீட்டிற்கு வீட்டு வேலை மற்றும் குழந்தை பராமரிப்பு செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு:

077 9866 032

(CS/60448) J-1

## தைத்திருநாளை முன்னிட்டு அராலி வீதியில் சிரமதானம்

யாழ்ப்பாணம்,ஜன.14

சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமையத்தின் ஏற்பாட்டில், தைத்திருநாளை முன்னிட்டு, 'அழகிய ஆரோக்கியமான யாழ்ப்பாணம்' எனும் மகுடத்துடன் இன்று புதன்கிழமை மாலை 3 மணி முதல் மாலை 6 மணி வரை ஓட்டுமடம் முதல் காக்கைதீவு வரையான அராலி வீதியின் இருமருங்கும் சிரமதானம் செய்யப்படவுள்ளது. (க-66)

## மரண அறிவித்தல்

### மேரி மார்கிறேற் யோண்சன் பசில் (பவளம்)



தோற்றம் 22.11.1947 — மறைவு 11.01.2026

யாழ்ப்பாணம், சில்லாலையை பிறப்பிடமாகவும் 171, கொழும்புத்துறை வீதி,பாண்டியந்தாழ்வு,யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மேரி மார்கிறேற் யோண்சன் பசில் (பவளம்) அவர்கள் (2026.01.11) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளை - மேரிதிரேசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற அருளப்பு தம்பிராசா - மேரிதிரேசா ராசாத்தி தம்பதிகளின் அன்பு மருமகளும், யோண்சன் பசிலின் அன்பு மனைவியும், லொய்ஸ், அலிஸின் அன்புத் தாயாரும், குமாரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற ஜோசவ் மரியநாயகம் மற்றும் அன்ரனிநாயகம், பரிமளம், தருளம், தயாளம் ஆகியோரின் சகோதரியும், றூபி, ஜேம்சன், யஸ்ரின், Fr.கிருபாகரன், அன்ரன் லூக், ஜேன், லலி,ஜறின் ஆகியோரின் மைத்துனியும், மேரி ஏஞ்சல், மேரி இவேஞ்சல், பிரியன், நிவியனின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 15.01.2026 வியாழக்கிழமை அன்று பாண்டியந்தாழ்வு இல்லத்திலிருந்து காலை 09.00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் காலை 10.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 31006) ER

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் அரியாலை ஆனந்தம் வடலி வீதியில் (AV வீதி) 3ம் ஒழுங்கையில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- AV வீதி முகப்புடன்.
- யாழ்ப்பாண பஸ் நிலையம் 4km தூரம்.
- A-9 வீதியிலிருந்து 400 m தூரம்.
- ஒரு பரப்பின் விலை 60 இலட்சம் ரூபாய்.

தொடர்பு:- 076 860 2770
076 987 8617

(CS 31005) A



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.01. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org